
குங்குமச்
சிமிழ்
15-10-2010
உள்ளம்
ரெண்டும்
ஒன்று
லட்சுமி பிரபா

# உள்ளம் ரெண்டும் ஒன்று

பூமியின் மௌனம் கலைத்து, பறவைகள் பட்டிமன்றம் நடத்த... மலர்கள் புத்துணர்ச்சியுடன் முகம் மலர்த்தி, ரசித்து சிரித்துக் கொண்டிருந்தன.

தோட்டத்து மலர்களைப் பார்வையால் வருடிக் கொடுத்த ராதா... கிணற்று மேடையருகே வந்தாள்.

பட்டாணி சைஸில் இருந்த சிறு கல்லைப் பொறுக்கி மெல்ல கிணற்றுக்குள் போட்டுவிட்டு... கிணற்று மேடையைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

டகடகவென்று ஜகடை உருள கிணற்றிலிருந்து நீரை இறைத்து பித்தளை அண்டாவில் நிறைத்தவள்... முகத்தை அலம்பிக் கொண்டாள்.

“காலங்கார்த்தால கிணத்துல தண்ணியிறைக்கும் முன்னாடி... சின்னக் கல்லைத் தூக்கி கிணற்றுக்குள்ளே மெதுவா போடணும். அதுக்கு அப்புறம் தான் இரும்பு வாளியை இறக்கி தண்ணீர் சேந்தணும்.

ஏன்னா... ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிற கங்கா மாதாவை மென்மையா தட்டி எழுப்பிவிட்டு அதுக்கு அப்புறமாத்தான் கனமான வாளியை

## லட்சுமி பிரபா

இறக்கி தண்ணீர் சேந்தணும்னு... ஆண்டாண்டு காலமா எங்கம்மாவும் பாட்டியும் சொல்லியிருக்காங்க...

பெரியவங்க சொன்னா... அதுலே எப்பவுமே ஒரு அர்த்தம் இருக்கணும். சரியா ராதா?" என்று அம்மா சிவகாமி அவளிடம் கூறி வைத்ததை... தட்டாமல் செய்து வருபவள் ராதா.

அம்மா கிழித்த கோட்டை அவள் என்றுமே தாண்டியதே இல்லை.

அம்மாவின் மனமறிந்து நடந்து கொள்பவள்.

மூத்த மகள் ராதா பொறுமைசாலி மட்டுமல்ல... பொறுப்பு மிகுந்தவள்.

அம்மாவின் மீதும் தங்கைகளின் மீதும் பாசமும் அக்கறையும் கொண்டவள். படிப்பிலும் கெட்டிக்காரி!

'கண் பார்த்தால் கை செய்யும் வகையைச் சார்ந்தவள்' சமையல் முதல் வீட்டை நேர்த்தியாகப் பராமரிப்பது வரை... அத்தனையும் அவளுக்கு அத்துபடி என்பதால்... அம்மா சிவகாமிக்கு அவள் மீது அதீத பாசம்!

ராதாவின் தங்கைகள் ஸ்வேதா, நிவேதா... இருவருமே மாநிறத்துடன் சுமாரான தோற்றம் கொண்டவர்கள் தான்.

ஆனால் ராதாவோ... சிற்பி செதுக்காத பொற்சிலையாய் காண்போர் கண்களைக் கட்டிப் போட்டாள்.

இரு தினங்களுக்கு முன்னர்தான்...

ராதாவுக்கும் சிவகாமியின் ஒன்றுவிட்ட அண்ணன் மகன் கண்ணனுக்கும் நிச்சயதார்த்தம் நடந்தேறியது.

ராதா எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது... திடீரென்று அவளது தந்தை சோமசுந்தரம், சாலை விபத்தில் மாட்டி மாண்டு போனார்.

மூன்று பெண் குழந்தைகளையும் தன்னையும் நட்டாற்றில் தவிக்க விட்டுக் கணவர் சென்றுவிட்டாரே? என்று கதறினாள் சிவகாமி.

அண்டிக் கொள்ள சொந்தமாய் அந்தக் காலத்து வீடு இருந்தது. வீட்டின் பின்னால் கையகல தோட்டம்!

கணவர் சோமசுந்தரம் வங்கியில் விட்டுச் சென்ற சொற்ப பணத்தை வைத்துக் கொண்டு.... எப்படி காலம் தள்ளுவது? என்று விழி பிதுங்கிய வேளையில்... சிவகாமியின் ஒன்றுவிட்ட அண்ணன் சத்தியசீலன் ஆதரவுக் கரத்தை நீட்டினார்.

ஐந்தாறு மாவரைக்கும் இயந்திரங்களை வாங்கிப் போட்டார்.

இட்லி மாவு, தோசை மாவு அரைத்து விற்பதற்கும், ஊறுகாய், இட்லிப் பொடி, மிளகாய்ப் பொடி முதலியவற்றை தயார் செய்து விற்பதற்கும்... தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டாள் சிவகாமி.

சொந்தக் காலில் தன்னை நிற்க வைத்து மானத்துடன் நிமிர்ந்து வாழ... வழி செய்த சத்தியசீலனை... அவள் தெய்வமாகவே மதித்தாள்.

காஞ்சிபுரம் மாவட்டம் படப்பையில் தான் அவர்களது வீடு இருந்தது.

அதிலிருந்து நான்கு தெருக்கள் தள்ளி... சத்திசீலனின் வீடு இருக்கவே... அடிக்கடி அவர் வந்து கவனித்துக் கொள்ள வசதியாய் இருந்தது.

சத்தியசீலனின் மனைவி சொர்ணம்... பெயருக்கேற்ப தங்கமான மனம் படைத்தவள்.

சிவகாமியின் குடும்பத்திற்கு தனது கணவர் செய்யும் உதவிகளை... அவள் என்றுமே தடுத்தது இல்லை.

சத்தியசீலன் – சொர்ணம் தம்பதியினரின் மூத்த மகன் கண்ணன்... ராதாவை விட ஏழு வயது மூத்தவன்.

கண்ணன் கருமை நிறம் படைத்தவன் தான்... ஆனால் குணத்தில் அவன் சொக்கத் தங்கம்!

கண்ணன் தனது தம்பி தங்கையின் மேல்... உயிரையே வைத்திருந்தான்.

அத்தை சிவகாமியின் குடும்பத்தின் மீதும் அவனுக்கு தனி அக்கறையும் பாசமும் இருந்தது உண்மை!

நல்ல மனம் கொண்டவர்களை... விதி, வெகுகாலம் வாழ அனுமதித்ததே இல்லையே...!

ராதா ப்ளஸ்–டூ படித்துக் கொண்டிருக்கும் போது சத்தியசீலன் மாரடைப்பால் மாண்டு போனார்.

'படப்பையில் சத்தியசீலனுக்கு மாட்டுப் பண்ணை, கோழிப் பண்ணை, காய்கறிக் கடை, பலசரக்குக் கடை, நஞ்சை, புஞ்சை நிலங்கள் எல்லாம் இருந்தன.


கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு... காஞ்சிபுரத்தில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலைக்குச் சென்று வந்து கொண்டிருந்த கண்ணன்... தந்தையின் மறைவுக்குப் பின், தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு... அப்பா கவனித்துவந்து பொறுப்பை எடுத்துக் கொண்டான்.

அத்தை சிவகாமியின் குடும்பத்தையும் தூணாய் நின்று தாங்கினான்.

"என்னதான் சுயமா தொழில் செஞ்சு சம்பாதிச்சாலும்... வர்ற காசு, வரவுக்கும் செலவுக்குமே சரியா இருக்கு.

உங்க படிப்பு செலவை... அண்ணனுக்கு அப்புறமா அவரு புள்ளை கண்ணன் ஏத்துக்கிட்டானே?

'அத்தே! கவலைப்படாதீங்க... நானிருக்கேன் உங்களுக்கு. தைரியமா இருங்க'ன்னு கண்ணன் அடிக்கடி சொல்றப்போ எவ்ளோ தெம்பா இருக்கு தெரியுமா?



**வ**டக்கு கலிபோர்னியாவில் ஒரு உயிர்க்காட்சி சாலையில் சூர்யா எனப் பெயரிடப்பட்ட உராங் உட்டான் மனித குரங்கும், ரோஸ்கோயி என்ற நாயும் நண்பர்களாகத் திகழ்கின்றன. இவைகள் இரண்டும் 24மணி நேரமும் பிரியாமல் வாழ்வது வியக்க வைக்கின்ற செய்தி.

– க.ரவீந்திரன்

இந்தக் காலத்துல இப்படியொரு இளைஞனை எங்கேயாச்சும் நாம்ப பார்க்க முடியுமா?

இத்தனைக்கும் காலேஜுக்குப் போய் படிச்ச பிள்ளை... ஆனா இப்போ? விவசாயத்தையும் பண்ணை வேலைகளையும், இழுத்துப்போட்டு பண்றதோட... காய்கறி பல சரக்குக் கடைகளையும் கவனிச்சு... தொழில்லே மளமளன்னு முன்னேறிக்கிட்டு வர்றானே?

அவனோட சுறுசுறுப்பையும் உத்வேகத்தையும், முன்னேற்றத்தையும் பார்த்து... ஊரே மூக்கு மேல விரலை வைச்சு அசந்து போய் பார்க்குது...

நாம படிச்சிருக்கோம்னு துளி கர்வம் இருக்கா? பேச்சுல பணிவு, பவ்யம், அடக்கம், பண்பு, கண்ணியம்...

இந்த உலகம் முழுக்க சல்லடை போட்டு சலிச்சுத் தேடிப் பார்த்தாலும்... இவனைப் போல் ஒருத்தனை நாம்ப எங்கேயுமே பார்க்க முடியாது. அது மட்டும் நிச்சயம்!

கண்ணனுக்கு நம்ம குடும்பமே கடன்பட்டிருக்கு ராதா!"

என்று அம்மா சிவகாமி மூச்சுக்கு முன்னூறு தரம் கூறிக் கொண்டிருந்தாள்.

சென்ற வாரம் கண்ணனின் தாயார் சொர்ணம், சிவகாமியைக் கூப்பிட்டு அனுப்பியிருந்தாள்.

"அண்ணி, உடம்புக்கு முடியாதவங்க... கூப்பிடறாங்க... என்னன்னு கேட்டுட்டு வந்துடறேன்" என்று ஓட்டமும் நடையுமாய் விரைந்தாள் சிவகாமி.

"உங்க அண்ணன் போனதிலேர்ந்து எனக்கு சுத்தமா முடியலை சிவகாமி! நம்ம குடும்ப ஜோஸியரை வரவழைச்சுப் பார்த்தேன்.

கண்ணனுக்கு கல்யாண யோகம் கூடி வந்திருக்காம். உடனே கல்யாணத்தை முடிக்கணுமாம். இதை விட்டா.. அப்புறம் இன்னும் அஞ்சு வருஷத்துக்கு தடங்கலா வந்து தள்ளிப்போயிரும்'னு சொன்னாரு.

அண்டை, அசல்லே பொண்ணு எடுக்க... எனக்கு விருப்பம் இல்ல... நம்ம ராதா இந்த வீட்டுக்கு வந்து விளக்கேத்தி வைக்கணும்னு நான் பிரியப்படறேன்.

நீ என்ன சொல்றே சிவகாமி? அவளும் இந்த வருஷம் தன் படிப்பை முடிச்சுட்டாள்லே? உனக்கு இதுலே ஆட்சேபணை இருந்தா... வெளிப்படையாவே சொல்லிடு" தயங்கியபடியே கேட்டாள் சொர்ணம்.

"அ... அண்ணி! என்ன இப்படிப் போய் கேட்கறீங்க? இதுக்கு என் பொண்ணு குடுத்துல்ல வச்சிருக்கணும்? எனக்குப் பரிபூரண சம்மதம் அண்ணி..." சிவகாமிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

"எதுக்கும் ராதாகிட்ட ஒரு வார்த்தை..."

"அட... நீங்கவேற... கண்ணனைக் கட்டிக்க எந்தப் பொண்ணுக்குதான் பிடிக்காது? பெத்தவ நான் சொல்றேன். ராதாவுக்கும் இதுல பரிபூரண சம்மதம்தான். நீங்க தயங்காம மேற்கொண்டு ஆக வேண்டியதைப் பாருங்க அண்ணி..." என்று தைரியமாகக் கூறிவிட்டு வந்திருந்தாள் சிவகாமி.

வாஸ்தவத்தில்... ராதாவுக்கும் கண்ணன் அத்தானை மிகவும் பிடித்துத்தான் இருந்தது.

கண்ணனின் மனிதநேயம், கருணை உள்ளம், இரக்க பாவம், சுறுசுறுப்பு, உத்வேகம்... எல்லாமே அவளைக் கவர்ந்து தான் இருந்தது.

கண்ணன் கருப்பு நிறம்தான்... இருந்தாலும் களையான தோற்றம் கொண்டவன்.

"ராதா நீ ரொம்பவே குடுத்து வச்சவ... அவங்களுக்கு இருக்கிற வசதிக்கு... பெரிய இடத்திலிருந்து பொண்ணு எடுத்திருக்கலாம்...

கண்ணனைக் கட்டிக்கிடறவ... பாக்கியசாலின்னு நான் அடிக்கடி நெனைப்பேன். அந்த பாக்கியம் உனக்கு கிடைச்சுதே.. உன் அதிர்ஷ்டம்தான்...

கண்ணனுக்கு நல்ல மனைவியா மட்டுமில்ல... அண்ணிக்கு நீ ஒரு மகளா இருந்து அவங்களை கவனிச்சுக்கணும்.

சுகுந்தி, ரகுவுக்கு நீ அண்ணியாகப் போற... அவங்களை நீ ஒரு தாய் ஸ்தானத்துல இருந்து நல்லபடியா பார்த்துக்கணும்.

அதைப் பார்த்து கண்ணன் சந்தோஷப்படணும். அப்பத்தான் என் மனசு குளிரும். செய்வியா ராதா?" கேட்டாள் சிவகாமி.

"அம்மா! நான் உன் பொண்ணும்மா... நான் நல்லபடியா நடந்து உன் பேரைக் காப்பாத்துவேன். அது என் கடமையாச்சே? அம்மா!"

அவள் கூறிய பதிலைக் கேட்டு... மகிழ்ச்சி தாளாமல், மகளை அணைத்து உச்சி முகர்ந்தாள் சிவகாமி.

குடும்பப் பொறுப்பும், நன்றி உணர்வும் கொண்டவள் தான் ராதா.

ஆனால்... நிச்சயதார்த்தத்திற்கு வந்திருந்த அவளது தோழி மாலா, ராதாவை மூளைச் சலவை செய்து விட்டிருந்தாள்.

பெரிய குடத்திலிருந்த பாலில்... ஒரு துளி விஷத்தை விட்டாற் போல் ஆகிவிட்டது.

## 2

**வா**சலில் நீர் தெளித்து, செம்மண் காவி கட்டி மனைக் கோலத்தைப் போட்டுவிட்டு உள்ளே நுழைந்தாள் ராதா.



**சி**ம்புவோடு சிலம்பாட்டத்தில் நடித்த சனாகான் 'ஹரே ராமா ஹேரே கிருஷ்ணா' என்ற தெலுங்குப்படத்தில் நடிக்கிறார். சாந்தனு பாக்கியராஜின் 'ஆயிரம் விளக்கு' என்ற படத்திலும் இவர் நடிக்கிறார்.

- க.ரவீந்திரன்

## கவிதைகள்

### குயில் அல்ல ... ரயில்!

மயில் என்றும்
குயில் என்றும்
உன்னை
வர்ணிப்பதைவிட
ரயில் என்ற
வார்த்தைப் பிரயோகமே
பொருத்தம்...
ஏனெனில்
நீ
என்னைக் கடந்து
செல்லும் பொழுதெல்லாம்
என்
இதயம் தடதடக்கிறதே!

- போளூர் சி.ரகுபதி

### தூறல்

பொழுதுக்கும்
'கதை'பேசிக்கொண்டே இரு..
என்று என்னை
கடிந்து கொண்டே
அம்மா அய்க்கியமாவாள்...
தொலைக்காட்சி முன்
தொடர் 'கதை'க்காக!

***

கால்களை ஒடுக்கி
அடக்கம் ஒடுக்கமாக உட்கார்
என்று கட்டளையிட்டது...
கழிந்த பேன்ட்!

- பொதக்குடி 'வெற்றிமுரசு'

### அனுபவம்

சொல்லித் தெரிந்த
காதலில்தான்
சொல்லாமல்
தெரிந்தது சோகம்!

- தமிழ்நாயகி, சேலம்

அவிழ்ந்த கூந்தலை அள்ளிக் கொண்டையிட்டபடி... வாசலை எட்டிப் பார்த்த சிவகாமியின் முகம் மலர்ந்தது.

"வெள்ளிக்கிழமையும் அதுவுமா வாசல்லே செம்மண் காவி தீட்டி பளிச்சுன்னு மங்கலகரமா கோலம் போட்டிருக்கே...

ரொம்ப லட்சுமி கடாட்சமா இருக்கு ராதா! புகுந்த வீட்டுலேயும் இதே மாதிரி நீ நடந்துக்கணும்.

சில பேரு... வசதி வாய்ப்பு இருக்குங்கிறதால... இந்த மாதிரி வேலைகளை எல்லாம்... வேலைக்காரங்க செய்யட்டும்னு ஜபர்தஸ்தா இருப்பாங்க...

லேட்டா எழுந்துக்கிறதை ரொம்பவும் பெருமையா நினைப்பாங்க...

அந்த மாதிரி நடந்துகிட்டா.. குடும்பம் உருப்படாது. மகாலட்சுமி நிரந்தரமா வீட்டுல தங்கணும்னா... அந்த வீட்டுல பொண்ணுங்க காலங்கார்த்தால... பிரம்ம முகூர்த்தத்துக்குள்ளே விளக்கேத்தி பூஜை செய்யணும்'னு... பெரியவங்க

சொல்வாங்க... என்னைப் போலவே நீயும் நாலு மணிக்கு எழுந்து பழகிட்டே அந்தப் பழக்கத்தை என்னிக்கும் நீ மாத்திக்கவே கூடாது ராதா!"

"இந்தப் பழக்கம் என்னோட ரத்தத்தோட ஊறிப் போச்சே அம்மா! நானே நெனச்சாகூட இதை மாத்திக்கவே முடியாதும்மா" முணுமுணுத்துவிட்டு நகரப் போனாள்.

"நில்லு ராதா! கல்யாணப் பேச்சு எடுத்தாலே... பொண்ணுங்களுக்கு முகத்துல தனிக் களையே வந்துடும்னு சொல்வாங்களே?

நிச்சயம் நடந்து முடிஞ்சிலேர்ந்து... நானும் கவனிச்சுட்டு வர்றேன். உன் முகம் ஏகத்துக்கும் வாடிக்கிடக்கே?

எதுக்காக? எதுவா இருந்தாலும் அம்மாகிட்ட வெளிப்படையா சொல்லும்மா" கரிசனமாய் கேட்டாள் சிவகாமி.

"ஒ... ஒண்ணுமில்லைம்மா... இத்தனை காலத்துல ஒருநாள் கூட நான் உன்னைவிட்டுப் பிரிஞ்சதே இல்ல... அதான்" சட்டென்று பொய் மூட்டையை அவிழ்த்துவிட்டு சமாளித்தாள் ராதா.

"அட... இதுக்கா இவ்ளோ விசனப்படறே? அட....கிறுக்குப் பொண்ணே! என்னை விட்டுப் பிரிஞ்சு... நீ என்ன தூர தேசத்துக்கா போகப் போறே?

இதே ஊரு... நெனச்சா பத்தே நிமிஷத்துல நடந்து வந்துடக்கூடிய தூரம் தானே? தினமும் ரெண்டுவாட்டி வந்து போகலாம்.

புகுந்த வீட்டுக்காரங்க..அந்நிய மனுஷங்களா இருந்தா... பழகற வரைக்கும் பயமும் தயக்கமும் இருக்கும்.

சொர்ணம் அண்ணி, கண்ணன், சுகந்தி, ரகு... இவங்க எல்லோரையும் பத்தி உனக்கு நல்லாத் தெரியுமே?

அவங்களும் உன்னை உள்ளங்கையில் வச்சுத் தாங்கறதுக்கு காத்திருக்காங்க...

எல்லாத்தையும் விட.... கண்ணன் தம்பியை நெனச்சுப்பாரு...

நிச்சயம் முடிஞ்ச அன்னிக்கு ராத்திரி எட்டு மணிக்கு மாப்பிள்ளை நம்ம வீட்டுக்கு வந்து என்ன சொன்னாருன்னு...? ஞாபகமிருக்கா? இல்லையா?" அதட்டினாள் சிவகாமி.

"ஞா... ஞாபகம் இருக்கும்மா" மிடறு விழுங்கினாள் ராதா. மனக்கண்ணில் அந்தக் காட்சி நிழலாடியது.

"அத்தே! நிச்சயம் ஆயிடுச்ச.. பாதிக் கல்யாணம் நடந்தது மாதிரிதானே?

இனிமே இந்த வீட்டுக்கு நான் மருமகன் மட்டுமில்ல... மூத்த மகனும் நான்தான். நீங்களும் எனக்கு அம்மா மாதிரிதான். நீங்க கடுமையா உழைச்சது போதும். இனிமே ஹாயா கோயில், குளம்னு நிம்மதியா போயிட்டு வாங்க...

இனிமே இந்தக் குடும்பத்தை நான் பார்த்துக்கிறேன். உங்களுக்கும் வயசாயிடுச்சு.

'என் வீட்டு பாரத்தை நான் தானே சுமக்கணும்'னு பேசி இதுக்கு மறுப்பு தெரிவிச்சுடாதீங்க...

இது ஒரு மகனோட வேண்டுகோள் மட்டுமல்ல... நான் உங்ககிட்டே கேட்கிற வரம்! இந்த வரத்தை நீங்க, உங்க மகனுக்கு தந்துதான் ஆகணும்."

கெஞ்சும் தொனியில் பேசியபடி கரங்களை அவன் கூப்பியதும்.. சிவகாமிக்கு நெஞ்சம் நெகிழ்ந்து விட்டது.

"ச... சரிப்பா! இப்படியொரு மருமகப் பிள்ளை கிடைக்க நான் பூர்வ ஜென்மத்துல புண்ணியம் பண்ணியிருக்கணும்" பதிலுக்கு சிவகாமியும் கரம் குவித்தாள்.

அடுக்களையிலிருந்து இந்தக் காட்சியைப் பார்த்த ராதாவுக்கு மனம் ஏனோ இளகவே இல்லை.

அன்று காலையில்தான் அவளுக்கும் கண்ணனுக்கும் 'நிச்சயம்' செய்திருந்தார்கள்.

ராதாவின் நீண்ட கூந்தலில் பூவைச் சுற்றி காலையில் அலங்காரம் செய்ததைக் கூட... அவள் இன்னமும் கலைக்கவில்லை. ஆனால்...

அவளது மனதைக் கலைத்து விட்டிருந்தாள் தோழி மாலா.

எதிர்வீட்டிலிருந்த மாலாவும் ராதாவும் பள்ளிப் பருவத்திலிருந்தே ஒன்றாகப் படித்தவர்கள்.

எதிரெதிர் வீடுகளில் குடியிருந்ததால்.. நகமும், சதையுமாய் நெருங்கிப்



**செ**ன்னை அடையாறு ஆனந்தபவன் சார்பில் நிறுவனரின் தந்தையார் நினைவாக ஆண்டுதோறும் பல்வேறு துறைகளில் உழைப்பால் உயர்ந்த சாதனையாளர்களுக்கு விருது வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழா பெங்களூரில் நடந்தது. இலக்கியம் மற்றும் எழுத்துத் துறையில் சாதனை படைத்தற்காக தமிழ் எழுத்தாளர் லட்சுமிபிரபாவுக்கு ஆனந்தபவன் உரிமையாளர் கே.டி.சீனிவாசராஜா–ஆனந்தி சீனிவாசன் விருது வழங்கினர்.

பழகினார்கள்.

மாலாவுக்கு படிப்பு அவ்வளவாக மண்டையில் ஏறவில்லை. பிளஸ் டூ தேர்வில் திக்கித் திணறி 'பார்டர் மார்க்ஸ்' வாங்கித் தேறியவளுக்கு...மேற்கொண்டு கல்லூரிக்குச் செல்ல மனம் இல்லை.

ராதா தன்னிகரில்லாத பேரழகியாக இருந்ததோடு... படிப்பிலும் 'நம்பர் ஒன்னாகத் திகழ்ந்ததைக் கண்டு உள்ளூர பொறாமையில் பொசுங்கிக் கொண்டிருந்தாள் மாலா.

ராதா வெள்ளை மனம் படைத்தவள். தோழி மாலா தன் மீது பொறாமைப் படுவதையோ... அவளது நெஞ்சத்தில் வஞ்சம் குடி கொண்டிருப்பதையோ.. புரிந்து கொள்ளும் பக்குவம் இல்லாதவள்.

பிளஸ்–டூ முடித்த கையோடு மாலாவுக்கு திருமணம் ஆகிவிட்டிருந்து.

சென்னைக்கு அருகில் உள்ள மகாபலிபுரத்தில்தான் கணவனோடு குடும்பம் நடத்திக் கொண்டிருந்தாள்.

இரண்டரை வயதில் ஒரு பெண் குழந்தை அவளுக்கு இருக்கிறது.

அடிக்கடி 'பட்டிக்கு' படகுக் காரில் சொகுசாய் வந்து இறங்குவாள் மாலா.

செல்வச் செழிப்பைப் பறைசாற்றும் விதமாய்... விலை உயர்ந்த உடை உடுத்தி அதிநாகரீகமாய் மிடுக்குடன் வந்து செல்லும் மாலாவை.. வியப்புடன் நோக்குவாள் ராதா.

பட்டிக்கு வரும் போதெல்லாம்... தான் ஓகோவென்று வாழ்வதையும் தன் கணவன் சுதாகரன் பிஸினஸில் ஒரு சூரப்புலி என்றும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடமும், ராதாவிடமும் பீற்றி விட்டுத்தான் செல்வாள்.

போன தடவை 'நிச்சயதார்த்தம்' நடந்து முடிந்த போது தான் மாலா வேகமாய் வந்தாள்.

தனியறையில் ராதாவை சந்தித்தாள்.

மணப்பெண் அலங்காரத்தில் தேவதையால் ஜொலித்துக் கொண்டிருந்த ராதாவைக் கண்டதும்... உள்ளூர அவளுக்கு திகு திகுவென்று பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது.

'அந்தஸ்தும் செல்வாக்கும் உள்ள குடும்பத்திற்கு... ராதா மருமகளாகப் போகிறாளா?

கண்ணன், திறமையும் சாமர்த்தியமும் நிறைந்த இளைஞன் ஆயிற்றே?

இப்பேர்ப்பட்ட அமோகமான வாழ்க்கை ராதாவுக்கு கிடைத்து விட்டதே?

விஷயத்தைக் கேள்விப்பட்டதிலிருந்து... அவளது வயிறு பற்றிக் கொண்டு எரியத் தொடங்கியது.

"ஏய் ராதா! இன்னிக்கு தான் நான் சென்னையிலிருந்து வந்தேன். வந்ததுமே எங்க வீட்டுல சொன்னாங்க...

'ஒப்புத் தாம்பூலம்' மாத்திக்கிட்டாங்களா? என்னடி இது? உன் வாழ்க்கையை நீயே பாழடிச்சுட்டியே?

இதுக்கு எப்படி சம்மதிச்சே? படிச்சவ நீ... இப்படி புத்திகெட்டுப் போயி... எல்லாத்துக்கும் தலையாட்டலாமா?

உன்னை பகடைக்காயா பயன்படுத்தியிருக்காங்க? அதுவும் பலிகடாவாக்கப் போறாங்க...

உனக்கு சூது வாது எதுவுமே தெரியலையே ராதா? இப்படி வெள்ளந்தியா இருக்கியே? முன்னாடியே இது சம்பந்தமா எனக்கு ஃபோன் போட்டு பேசியிருந்தா... நான் உனக்கு புத்திமதி சொல்லி... நீ என்ன செய்யணும்னு ஐடியா குடுத்திருப்பேனே?

உனக்கு என்ன கெடுதல் நடந்திருக்குன்னு கூடத் தெரியாம நல்லா அலங்கரிச்சுக்கிட்டு சிரிச்ச முகமா உட்கார்ந்திருக்கியே ராதா?

உனக்கு நேர்ந்த கதியை நெனச்சு... எனக்குஅடிவயிறு கலங்குதே... அழுகை,



மல்லிகா ஷெராவத் ஹாலிவுட் நடிகர் அரோன் ஸ்டோனுடன் சேர்ந்து நடிக்கிறார். ஷரோன் ஸ்டோன் தனது புதிய படத்தில் நடிக்க உலகமெங்கும் நடிகைகளை தேடிக் கடைசியாக மல்லிகா ஷெராவத்தை தேர்ந்தெடுத்துள்ளாராம்.

- க.ரவீந்திரன்

தொண்டையை பந்தா அடைச்சுட்டு நிக்குதே ராதா?" தழைந்த குரலில் பேசிவிட்டு... பொல பொலவென்று நீலிக் கண்ணீர் உகுந்தாள் மாலா.

ராதாவுக்கு தலையும் புரியவில்லை. வாலும் புரியவில்லை.

தோழி பேசியதைக் கேட்டதும்... அவளது மனம் குட்டையாய் குழம்பியது.

உள்ளுக்குள் திகில் ஊறியது. பயம் சுரந்தது.

## 3

பயத்தில் உலர்ந்து போன உதட்டை, நாவில் ஈரப்படுத்தியபடி மெல்லக் கேட்டாள்.

"மாலா! நீ என்ன சொல்ல வர்றே? எனக்கு ஒண்ணுமே புரியலையே?

சுத்தி வளைக்காம சட்டுன்னு விஷயத்துக்கு வா!"

"ஒண்ணுமே புரியாதவளா நீ இருக்கப் போய்தானே... எல்லாருமா சேர்ந்து அநியாயமா உன்னைப் பாழும் கிணத்துல தள்ளிவிட ஏற்பாடு பண்ணியிருக்காங்க" வெடுக்கென்று கூறினாள் மாலா.

"பாழும் கிணத்துல என்னை தள்ளிவிட ஏற்பாடு பண்றாங்களா? மாலா! போதும்... நீ நேரடியா விஷயத்தை சொல்லாம இப்படிப் பூடகமாவே பேசிட்டிருக்கியே?

என் மனசுல பீதியைக் கிளப்பாதே... பூடகமா பேசினா எனக்கு புரியாதுன்னு... உனக்கு நல்லாவே தெரியுமே?

சீக்கிரமா என்னன்னு சொல்லு மாலா!" தோழியின் கரத்தை இறுகப் பிடித்துக் கொண்டாள் ராதா.

"சொல்றேன் ராதா! அதுக்கு முன்னால இதோ இந்த அலமாரியில பதிஞ்சிருக்கிற கண்ணாடியில தெரியிற உன் உருவத்தைப் பாரேன்.

எவ்ளோ அழகாயிருக்கே? தங்கத்துல செஞ்சு வச்சு சிலை மாதிரி ஜொலிக்கிறியே?

எத்தனையோ வாட்டி நான் கவனிச்சிருக்கேன். வெயில்லே நீ நடந்து போனா... உன் முதுகு தங்கப்பாளமா மின்னுறதை ... நானே ஆசையா பார்த்திருக்கேன். தெரியுமா?

நீயே சொல்லு ராதா! நீயும் அந்த கண்ணனும் ஜோடியா நடந்து போனா... எப்படியிருக்கும்? பார்க்கிறவங்க உங்களைப் பத்தி என்னன்னு நெனப்பாங்க?" ராதாவின் தோளைத் தொட்டு அசைத்தாள் மாலா.

"எ... என்ன நெனப்பாங்க?"

"இப்படி அப்பாவியா என்னையே திரும்பக் கேளு...! சரி... நானே சொல்லிடறேன்.

தங்கப்பதுமையா நீ இருக்கே... கண்ணன் உன்கிட்ட நின்னா... கன்னங்கரேல்னு பார்க்க சகிக்குமா?

சே! அரிசியையும் எள்ளையும் ஒண்ணா இறைச்சு விட்டாப்பல... கண்ணுல அறையற மாதிரி இருக்கும் தெரியுமா?

இப்படியொரு கருவாளிப் பயலுக்கு... தங்கக் கிளியாட்டம் மனைவி வாய்ச்சிருக்காளே?ன்னு... எல்லாரும் உங்களைப் பார்த்து சிரிக்கமாட்டாங்களா?

இன்னொரு முக்கியமான சங்கதியையும் நீ தெரிஞ்சுக்கணும். கண்ணன் ஒரு சூழ்ச்சிக்காரன். அவன் நல்லவனே இல்ல..."

"கண்ணன் அத்தான் நல்லவர் இல்லையா? எதை வச்சு அப்படி சொல்றே?"

விட்டால் கோவென்று அழுது விடுவாள் போலிருந்தது.

"ஆமாம் ராதா! நல்லவன் இல்லைதான். இத்தனை காலமா உங்க குடும்பத்துக்கு நிறைய சகாயம் செய்துட்டு வந்ததுக்குக் கூட ஒரு உள்நோக்கம் இருக்கு. தெரியுமா?

ராதா ஏகத்திற்கும் அதிர்ந்து போனாள்.

"அவர் உதவி பண்ணினதிலே... என்ன உள் நோக்கம் இருக்க முடியும்?"

"கண்ணன், உண்மையிலேயே கருணை உள்ளம் கொண்டவனா, தாராள மனப்பான்மை உடையவனா இருந்திருந்தா... உதவி செய்யறதோட நிறுத்தியிருக்கணுமே?

அப்படி செய்யலையே? ஏன்? உலக அழகிப் பட்டம் வாங்கினவள் கூட, உன் அழகுக்கு முன்னாடி பிச்சை எடுக்கணும் தெரியுமா?

அப்பேர்ப்பட்ட பேரழகு உன்கிட்ட இருக்கு. இந்தப் பேரழகியை தன் மனைவியாக்கிடணும்னு திட்டம் போட்டுத்தான் உன் குடும்பத்துக்கு உதவற மாதிரி நடிச்சிருக்கான்.

உதவி பண்ணி உங்கம்மா மனசுல ஒரு நல்ல எண்ணத்தையும் ஒரு நன்றி உணர்ச்சியையும் உண்டு பண்ணிட்டான்.

'ஊரு உலகத்துல இப்படியொரு தங்கமான பிள்ளையைப் பார்க்க முடியுமா? அப்படின்னு... உங்கம்மா, சதா கண்ணன் புராணத்தைப் பாடற அளவுக்கு... அவங்க மனசை மாத்திட்டான்.

அந்த சொர்ணம்... அதான் கண்ணனோட அம்மா, அவளும் இலேசுப்பட்டவள் கிடையாது.

சொர்ணம்... ஏகப்பட்ட வியாதிகளைக் குத்தகைக்கு எடுத்திட்டிருக்கிற நோயாளி!

பெரிய இடத்திலிருந்து பொண்ணை... மருமகளா கொண்டு வந்தா... தன்னை திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாளே?ங்கிற பயம்... அந்தக் கிழவிக்கு வந்திருக்கு..

அதான்... பெரிசா மனம் இரங்கி உன்னை மருமகளா கூட்டிட்டுப் போகிறேன்'னு உங்கம்மாகிட்டே சொல்லிட்டா

உங்கம்மா அப்படியே நெக்குருகிப் போய்... உன்னை தாரை வார்த்துக் கொடுக்க சம்மதிச்சுட்டாங்க.

உங்கம்மாவும் சுயநலத்தோட தான் செயல்பட்டிருக்காங்க ராதா"

"மாலா! சும்மா பேசிக்கிட்டே போகாதே... எங்கம்மா காதுல விழுந்தா... ரொம்ப வருத்தப்படுவாங்க. அவங்க என்னிக்கும் சுயநலமா சிந்திச்சதே இல்ல.. தெரியுமா?

எங்கம்மாவைப் பத்தி என்கிட்டேயே இப்படி பேசறியே இது நல்லாயில்ல மாலா"

வெடுக்கென்று மூக்கு நுனி சிவக்க.. விழிகள் உஷ்ணத் தீ உமிழ, முறைத்தாள் ராதா.

"உண்மையைத்தானே நான் சொல்றேன் ராதா! உண்மை சில

சமயத்துல கசக்கத்தான் செய்யும் நின்னு நிதானமாக யோசிச்சுப் பாரு...

நான் சொல்றதுல இருக்கிற உண்மை... உன்கே புரியும்.

கண்ணனுக்கு உன்னைக் கட்டிக் கொடுத்துட்டா... கண்ணன் இந்தக் குடும்பத்தையே பார்த்துப்பான்'னு உங்கம்மா ஸ்ட்ராங்கா நம்பறாங்க... ஒட்டுமொத்த குடும்ப பாரமும் இறங்கறதோட, உன் இரண்டு தங்கைகளையும் மூத்த மாப்பிள்ளையின் தயவிலேயே கரையேத்திடலாம்னு திட்டம் போட்டுத் தான் இதுக்கு சம்மதிச்சிருக்காங்க...

இது சுயநலமில்லையா? உன் மேல உண்மையான அன்பு இருந்தா... அவங்க இதுக்கு சம்மதிச்சிருக்க மாட்டாங்க...

தங்க விக்கிரகம் மாதிரி ஜொலிக்கிற பொண்ணுக்கு ஏத்த மாதிரி நல்ல நிறமா இருக்கிற மாப்பிள்ளைக்கு தானே தன்னைக் குடுத்திருக்கணும்?

கொஞ்சம் யோசிச்சுப் பாரு ராதா! என்

## கவிதைகள்

நிறைய நிறைய புத்தகம்
நிறைந்தது தான் நூலகம்!

குறையக் குறைய அறிவையே
கொடுக்கும் நல்ல புத்தகம்

இரையை தேடும் பறவைபோல்
இதையும் அதையும் புரட்டியே
அறிவுப் பசியை போக்கலாம்.

- தமிழ்நாயகி,
சேலம்

### நிச்சயம்

**தி**ருமணம்
சொர்க்கத்தில்
நிச்சயமாக வேண்டாம்
சாதி
வர்க்கத்தில்
நிச்சயமாகாமல்
இருந்தால் சரி...

- செல்வராஜா, சேலம்

***

### காதல் வார்த்தை

**கா**தலியின்
வார்த்தை
கவிதையாகத்தான்
இனிக்கும் என்றில்லை
விஷமாகவும் மாறலாம்
மறந்து விடு
என்று...
சொல்லும் போது.

- செல்வராஜா,
சேலம்

வீட்டுக்காரர் சுதாகர் எவ்ளோ நாகரீகமா நாசூக்கா டீசண்டா இருக்காரு.

கண்ணனைப் பாரேன்... பண்ணை வேலைகளை இழுத்துப் போட்டுக்கிட்டு... சதா வேர்வை வழியற முகத்தோட... சாதாரண விவசாயி மாதிரியில்ல திரியறான்.

இப்படிப்பட்டவனுக்கு ஒரு அழகுப் பொக்கிஷத்தை தாரை வார்க்க... உங்கம்மா சம்மதிச்சிருக்காங்களே?

இதை என்னன்னு நாம்ப நினைக்கிறதாம்? ஆர அமர யோசிச்சுப் பாரு... நான் சொல்றது அத்தனையும் உண்மைன்'னு உனக்கே புரியும்."

ராதா ஒரு வெள்ளந்தி... சட்டென்று எதையும் நம்பி விடுபவள் என்று மாலாவுக்குத் தெரியும்.

ராதாவின் உள்ளத்தில் நஞ்சைக் கலந்துவிட்ட திருப்தியில் வெளியேறினாள்.

ராதா... உள்ளூர சுக்கு நூறாய் நொறுங்கி விட்டிருந்தாள்.

## 4

'கண்ணனுக்கு மாலை சூட்டப் போகிறோம்' என்று ராதாவுக்குள் கடலளவு மகிழ்ச்சி அலை அலையாக கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது.

ஆனால் மாலா பேசியதைக் கேட்டதும்... அடுத்த கணத்திலேயே அந்த மகிழ்ச்சி மங்கி மறைந்தது. உள்ளூர வெறுப்பு மண்டத் தொடங்கியது.

'எல்லாருமாகச் சேர்ந்து என்னை வஞ்சிக்கிறார்கள்' என்ற கசப்புணர்வும் வேதனையும் அவளைப் பாடாய் படுத்தியது.

முகத்தை சகஜமாய் வைத்துக்கொள்ள... அவள் மிகவும் பிரம்மப்பிரயத்தனம் செய்ய வேண்டியிருந்தது.

'அந்த நாளும் வந்திடாதோ...' என்று எந்தவொரு பெண்ணும் தனது 'மாலை ஆடும் மணநாளை...' ஆவலுடன் ஆயிரம் கனவுகளுடன் எதிர்பார்ப்பாள்.

ஒவ்வொரு பெண்ணுக்குமே அவளது மணநாள் தானே வாழ்நாளில் திருநாளாக இருக்க முடியும்?

அந்த மணநாளில் கடுகளவு சந்தோஷம் கூடத் தலை காட்டாமல்... ஒப்புக்கு உதட்டில் புன்னகையை ஒட்ட வைத்துக் கொண்டு... கழுத்தை நிறைத்த கனத்த மாலையுடன் பார்வையைத் தழைத்துக் கொண்டிருந்தாள் ராதா.

கண்ணனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. அடிக்கடி பக்கவாட்டில் திரும்பி தனது மனைவியின் அழகு முகத்தை ஆசையுடன் நோட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

கண்ணனின் கரத்தைப் பற்றியபடி முதல் முதலாய் அவனது வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாள்.

பெரியவர்களின் உத்தரவுப்படி... பூஜையறையிலிருந்து வெள்ளிக் குத்து விளக்கை ஏற்றி வைத்து வணங்கினாள்.

மாமனாரின் திரு உருவப் படத்திற்கு முன்பு உதிரிப்பூக்களைத் தூவி, தொட்டு வணங்கி விட்டு... தம்பதி சமேதராய் சொர்ணத்தின் காலில் விழுந்து நமஸ்கரித்தனர்.

கண்கள் பனிக்க ராதாவின் தோள்களைப் பற்றித் தூக்கிய சொர்ணம், "அம்மாடி ராதா! இனிமே இந்தக் குடும்பத்தை நீ தான் பார்த்துக்கணும்." என்று கூறி விட்டு தனது இடுப்பில் தொங்கிய கொத்துச் சாவியை எடுத்து ராதாவின் வலது கையில் வைத்து அழுத்தினாள்.

"கட்டும் செட்டுமா குடும்பத்தை நிர்வகிச்சு... என் பசங்களைப் பார்த்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு ராதா! இப்பத்தான் என் மனசுல இருக்கிற பாரம் இறங்கின மாதிரி இருக்கு" முறுவலித்தாள் சொர்ணம்.

"அத்தே! நீங்க பெரியவங்க... சாவி உங்ககிட்டயே இருக்கட்டும். நீங்க வழி நடத்தறபடி நடந்துக்க வேண்டியது என் கடமை.. இப்போதைக்கு இந்தச் சாவி..." தடுமாறினாள் ராதா.

"ஊகூம்! நீ மறுத்து எதுவும் பேசக் கூடாது. நாங்க பார்க்க வளர்ந்த பொண்ணு நீ! கொத்துச்சாவி இனி உன்கிட்டதான் இருக்கும்.

உன் குணம் என்னன்னு எங்களுக்கு நல்லாவே தெரியும். உன்னோட பொறுப்புணர்ச்சி, பொறுமை, சகிப்புத்தன்மை அனுசரணை..

எல்லாத்தையும் பார்த்துட்டு.. உங்க மாமாவும், நானும் அடிக்கடி பேசிப்போம்.

'கண்ணன் – ராதா' பேர் பொருத்தம் நல்லாயிருக்கு. இவளே நம்ம வீட்டுக்கு மருமகளா வரணும்னு... நான் அடிக்கடி சொல்லுவேன்.

அதுக்கு உங்க மாமனார் 'இப்பவே வெளிப்படையா எதையும் சொல்லிக்க வேணாம். பகவான் இவங்க ரெண்டு பேத்துக்குள்ளே முடிச்சுப்போட்டு' வைச்சிருந்தா அது நம்ம அதிர்ஷ்டம்.

அததுக்கு காலநேரம் வர்றப்போ... சிவகாமி கிட்டே பேசி முடிப்போம். அதுவரைக்கும் இந்த விஷயத்தைப் பத்தி நீ மூச்செடுக்க வேணாம்'னு சொல்லியிருந்தாரு.

அவரு சொன்னாப்பல... பகவான் உங்களுக்கு முடிச்சுப்போட்டு

**க**ப்பலோட்டிய தமிழர் வ.உ.சி சிறையில் இழுத்த செக்கு கோவை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்தது. இதை இப்போது சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் கொண்டு வந்து வைத்துள்ளனர்.

**- க.ரவீந்திரன்**

வச்சிருக்காரு.. என்னோட நீண்ட கால ஆசையும் நிறைவேறியிருக்கு.

"இந்தக் காலத்துப் பொண்ணுங்களுக்கு... பொறுமையும் சகிப்புத்தன்மையும் துளி கூட இல்லாம போச்சே? கல்யாணமான மறுநாளே புருஷனை இழுத்துக்கிட்டு தனிக்குடித்தனம் போக ஆசைப்படுறாங்களே?


ஆனா நீ பத்தரை மாத்துத் தங்கமாச்சே? உன்னோட பொறுமையும் சகிப்புத் தன்மையும் தான்... உன்னை இந்த வீட்டு மருமகளாக்கியிருக்கு ராதா!"

ஒரு புன்னகையை பதிலாக்கிவிட்டு தரையில் பார்வையைப் பதித்தாள் ராதா.

தோழி மாலா மட்டும் அவளது மனதைக் கலைக்காமல் இருந்திருந்தால்... இந்த தருணத்தில் சொர்ணம் பேசியதைக் கேட்டு சந்தோஷத்தில் உச்சி குளிர்ந்திருப்பாள் ராதா. ஆனால் இப்போதோ அவளது மனம் குதர்க்கமாய் யோசித்தது.

'கொத்துச் சாவியை ஊர்ப் பெருமைக்கு கையில குடுத்துட்டாங்க..." மாலா சொன்னது சரிதான்! சின்ன வயசிலேருந்தே என்னைப் பார்க்கிற போதெல்லாம், மருமகளாக்கிடணும்னு எண்ணம் வந்தது என்கிறாரே அத்தை? இந்த உள்நோக்கத்தோடதான் உதவியே செஞ்சிருக்காங்க போல..'

'ராதா நன்றிக் கடன் பட்டவ... காலத்துக்கும் காலடியிலேயே



அடங்கிக் கிடப்பா'ங்கிற அழுத்தமான நம்பிக்கையில தான்... எனக்கு வாழ்க்கையைக் கொடுத்திருக்காங்க...

இந்தக் குடும்பத்தை விட்டு... நான் எங்கேயும் ஒருநாள் கூட ஜாலியாக கணவனுடன் வெளியில் செல்ல முடியாது போலிருக்கிறதே?

காலத்துக்கும் ஓடாய் உழைத்து தேய்ந்து விட வேண்டியது தானா?

எல்லாருக்கும் ஓடி ஓடி சேவகம் செய்திவதிலேயே என் வாழ்க்கை கழிந்து விடும் போலிருக்கிறதே?'

உள்ளுக்குள் மனம் பொருமியது.

# 5

முதலிரவு!

ஊதா வண்ண பனாரஸ் பட்டுப் புடவையில்... எளிய அலங்காரத்துடன் பால் சொம்பை கையிலேந்தி நடந்து வந்த ராதாவை... ஏற இறங்க அளவெடுத்தான் கண்ணன்.

அவளிடமிருந்த பால் சொம்பை வாங்கி மேசையில் அவன் வைத்தான். அவனை ஒரு கணம் தயக்கத்துடன் ஏறிட்டு விட்டு சட்டென்று அவனது பாதங்களைத் தொட்டுப் பணிந்தவளை... பதற்றத்துடன் தூக்கி நிறுத்தினான் கண்ணன்.

"எ.. என்னது இது? இந்த ஃபார்மாலிட்டீஸ் எல்லாம் நமக்குள்ளே வேண்டாமே?

முகம் ரொம்ப வாட்டமா இருக்கே? டயர்டா இருக்கா ராதா?"

"த....தலை வலிக்குது. அதான்..."

"ஓ... இருக்கும் தான்... தலை நிறைய பூச்சூடி கசகசன்னு மாலையோட.... காலையிலேர்ந்து ரெஸ்ட்டே இல்லாம இருந்ததால... இப்படியிருக்குன்னு நெனக்கிறேன்.

ராதா! இந்த ஊதா வண்ண பனாரஸ் பட்டுப்புடவை உனக்கு எவ்ளோ எடுப்பா இருக்கு தெரியுமா?

இந்தக் காலத்துல பொண்ணு... அதுவும் படிச்சவள்... ஆனா ரொம்ப வித்தியாசமா நீ இருக்கே ராதா!

நான் உங்க வீட்டுக்கு அடிக்கடி வர்றப்போ எல்லாம் வாங்க உட்காருங்க அப்படின்னு ரெண்டொரு வார்த்தை பேசிட்டு ஓடிப்போய் அடுக்களையில நீ ஒளிஞ்சுப்பியே?

உன்னை ஆசை தீரப் பார்த்து ரசிச்சபடி நிறைய பேசணும்னு ஏக்கத்தோடு வருவேன். எனக்கு ஏமாற்றமா இருந்தாலும்... உன்னோட அடக்கம், பணிவு, பவ்யம், பொறுப்புணர்ச்சி, அனுசரணை எல்லாம்

பிடிக்கும்.

என்னைப் பொறுத்தவரை... இது வீடு இல்ல... ஒரு கோவில்! அம்மா தான் என் தெய்வம்!

கடைசி வரைக்கும் எல்லாரும் ஒற்றுமையா கூட்டுக் குடும்பமா இருக்கணும். கட்டுக்கோப்பா குடும்பத்தைக் கொண்டு போகணும்'னு எனக்கு ஆசை...

உன்னைத் தவிர வேற யாரைக் கைப்பிடிச்சாலும் என் ஆசைக்கு வேட்டு வச்சிடுவாங்கன்னு... எனக்கு நல்லாத் தெரியும்.

என் ஆசை நிறைவேறணும்னு தான்.. உன்னை நான் விரும்பி கட்டிக்கிட்டேன் ராதா!"

ஆசையும் காதலுமாய் அவளைப் பார்த்துவிட்டு... அவளது பூங்கரத்தைப் பிடித்து மென்மையாய் முத்தமிட்டான்.

"அப்படியென்றால்... மாலா சொன்னது சரி தான். இவர் என்னை ஆத்மார்த்தமாக நேசிக்கவில்லை போல் இருக்கிறதே?

இவரது ஆசையை நிறைவேற்றி வைப்பதற்கு.. தகுதியான பெண் நான் என்பதால் தானே என்னை விரும்பிக் கைப்பிடித்தார்.

இதற்கு என்ன அர்த்தம்? உண்மையிலேயே இவருக்கு என் மீது அன்பு இல்லை...

அவரது எதிர்பார்ப்பிற்கு ஏற்றபடி வளைந்து கொடுத்து அனுசரித்து... இன்னும் சொல்லப்போனால்... உயர் மட்டத்து வேலைக்காரியாக நான் நடந்து கொள்ள வேண்டும் என்று பிரியப்படுகிறார்.

மாமியார் சொர்ணமும் கொத்துச்சாவியை கையில் கொடுத்துவிட்டு நிம்மதியடைந்து விட்டார்.


ஒட்டு மொத்தக் குடும்பப் பொறுப்பை என் தலையில் சுமத்தி விட்டார்கள்.

ஒவ்வொருத்தரின் விருப்பு வெறுப்புகளைத் தெரிந்து கொண்டு சமைத்து... அவரவர்க்கு ஏற்றாற்போல் நடந்து பம்பரமாய் சுழன்று... வீட்டை நிர்வகிக்க வேண்டும்.

அவ்வாறு கடைசி வரை நான் நடந்து கொள்ள வேண்டும். அப்படி நடந்தால் தான்... இவரது மனதில் தான் நிரந்தரமாக இடம் பிடிக்க முடியும்' என்று இவர் சொல்லாமல் சொல்கிறாரோ?

ஆம்... அப்படித்தான் இருக்க வேண்டும். முதலிரவிலேயே இதைப் பற்றி பிரஸ்தாபிக்கிறாரே? அதற்கு என்ன அர்த்தம்?

என் நிலைமை என்னவென்று தெளிவாக விளங்கிவிட்டது.



**ஆ**திசங்கரர் அவதரித்த காலடி கொச்சியிலிருந்து வட கிழக்கே 48 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இது பெரியாறு(பூர்ணா) நதிக்கரையில் உள்ளது. இங்குள்ள எட்டடுக்கு ஆதிசங்கர கீர்த்தி ஸ்தம்பம் மிகச்சிறப்பாக கட்டப்பட்டுள்ளது.

**- க.ரவீந்திரன்**

இந்த குடும்பத்திற்கு நான் ஒரு வேலைக்காரி.

பட்டும் நகையும் அணிந்து கவுரவமாய் வலம் வரும் அந்தஸ்தான வேலைக்காரி.

இவர் தனது சுயநலத்திற்காகத் தானே.... என்னைக் கரம் பிடித்திருக்கிறார்?

இவரைச் சொல்லி என்ன பிரயோஜனம்?

பெற்ற தாயே சுயநலமாக நடந்து கொண்டாளே?'

கரு முத்துக்களைத் தன்னுள் சுமந்த விழிச்சிப்பிகளுக்குள்ளே...

கண்ணீர் சரம் கோர்த்தது.

அவளது விழிகள் கண்ணீரில் ததும்பியதைக் கண்டதும்.. கண்ணன் துணுக்குற்றான்.

## 6

"ராதா! என்னாச்சும்மா...? தலைவலி ஜாஸ்தியா இருக்கா? இப்படி கண்ணுல தண்ணி வர்ற அளவுக்குன்னா... அப்போ வலி ரொம்ப அதிமாகத்தான் இருக்கணும்...

இரு! அம்மாகிட்ட கேட்டு மாத்திரை வாங்கிட்டு வரேன். அவங்க எப்பவும் காய்ச்சல், தலைவலி, வயிற்றுப்போக்கு... இதுக்கெல்லாம் மாத்திரைகள் வாங்கி வச்சிருப்பாங்க..."

நகரப் போனவனை சட்டென்று இடைமறித்தாள் ராதா. "இல்ல... வேணாம். கொஞ்ச நேரத்துல சரியாயிடும். இப்ப நீங்க வெளியில போனா... பெரியவங்க வீணா மனசுல சங்கடப் படுவாங்க"

"அதுவும் சரிதான். நீ படுத்து ரெஸ்ட் எடு ராதா! அப்புறம் இன்னொரு விஷயம் சொல்ல மறந்துட்டேன்.

இங்க... நம்ம வீட்டுல சமைக்கிற வேலை மட்டும் தான் உனக்குப் பிரதானமா இருக்கும்.

சுத்து வேலைங்க செய்யறதுக்கு ஆட்கள் இருக்காங்க... நீ அவங்களை ஏவி வேலை வாங்கிக்கணும். அவ்வளவுதான்!

அதனால உனக்கு நிறைய அவகாசம் கிடைக்கும். எனக்கு காலையிலேர்ந்து நைட் வரைக்கும் வேலைங்க அடுக்கடுக்கா இருக்கும்.

கிட்டத்தட்ட தூங்க வர்றதுக்கு பதினொரு மணியாயிரும். உனக்குப் பொழுது போகாம நீ கஷ்டப்படக்கூடாது இல்லையா?

அதனால அஞ்சல் வழியிலே நீ மேலே படிக்கிறதுக்கு ஃபார்ம் வாங்கி வச்சிருக்கேன்.

நாளைக்கு மறக்காம ஃபில்லப் பண்ணி என்கிட்டே குடுத்துடு...

நீ ரொம்ப நல்லா படிக்கிற பெண்ணாச்சே? அதனால தான் இந்த ஏற்பாட்டை செய்தேன்..."

ஓகே ராதா! என்ன அப்படி பார்க்கிறே? உனக்கு இதிலே சந்தோஷம் தானே?"

அவன் பேசியதைக் கேட்டு அரண்டு போய் விட்டிருந்தாள் ராதா.

"உன் கண்ணுல ஜலம் வந்ததைப் பார்த்ததும் எனக்கு பகிர்னு ஆயிடுச்சு ராதா!

உன் கண்ணுல இருந்து ஆனந்தக் கண்ணீர் வந்தாக்கூட என்னால தாங்க முடியாது. தெரியுமா?

அந்த அளவுக்கு உன்மேல நான் பிரியம் வச்சிருக்கேன்.

நெருங்கின சொந்தத்திலே நீ வாழ்க்கைப்பட்டிருக்கலாம்.

என்னதான் இருந்தாலும் புது இடம்... புது சூழல்.. இதோட மனசு இயல்பா ஒட்டறதுக்கு கொஞ்ச நாளாகும்.

உங்க வீட்டுக்கு நான் வர்றப்போ எல்லாம் உன் முகம் எப்படியிருக்கும் தெரியுமா?

இன்னிக்கு பூத்த புது ரோஜா மாதிரி சிலீர்னு அவ்ளோ மலர்ச்சியா இருக்கும்.

அந்த மலர்ச்சி உன் முகத்துல மறுபடியும் வரணும். உன் முக வாட்டம் மறையணும்.

எப்போ உன் முகத்துல அந்த மலர்ச்சி வருதோ.. அப்போ நீ என் கூட ஐ மீன் இந்தக் குடும்பதோட ஒன்றிப்போயிட்டேன்னு நான் புரிஞ்சுப்பேன்.

அதுக்கு அப்புறமா நாம்ப வாழ்க்கையைத் தொடங்கலாமே?

கணவன்கிற அதிகாரத்துல வலுக்கட்டாயமா மனைவி கிட்ட உரிமை எடுத்துக்கிறதிலே எனக்கு உடன்பாடு இல்லை.

'அத்தான்! நான் உங்களை அளவு கடந்து நேசிக்கிறேன். இது நம்ம வீடு. நம்ம குடும்பம்னு நான் இயல்பா ஒன்றிப் போயிட்டேன்.

நம்ம ரெண்டு உள்ளமும், ஒன்றுதான்... மனப்பூர்வமா உங்க மனைவியா வாழத் தயார்'னு... நீ சொல்ற வரைக்கும்... நான் காத்திட்டிருப்பேன் ராதா!

அந்தப் போர்வையையும் தலையணையையும் எடு... நான் அங்கே கீழே படுத்துக்கிறேன்..."

"நீ... நீங்க போய் கீழே படுத்துக்கிட்டு.. வேணாம்" பதறினாள்.

"சரி... உன் இஷ்டம்! நான் கட்டில்லே இந்த ஓரமா படுத்துக்கிறேன். சரியா? குட் நைட் ராதா"

வியப்பின் விளிம்பிற்கே சென்று விட்டிருந்த ராதா... முதுகு காட்டிப் படுத்துக் கொண்ட கணவனை இமை கொட்டாமல் பார்த்தாள்.

'நான் மேற்கொண்டு படிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். என் முக வாட்டத்தைப் பார்த்துவிட்டு மிகவும் பதறுகிறார்.

மென்மையான உணர்வுகளுக்கும் பெண்மைக்கும் மதிப்பளித்து சட்டென்று விலகி நிற்கிறார்.

இதெல்லாம் சராசரி மனிதர் செய்யும் காரியமாய் தெரிய வில்லையே?

இவரைப் போய் சுயநலவாதி என்று தப்பாய் எடை போட்டு விட்டேனே?

எது நிஜம்? எது பொய் என்று ஊர்ஜிதமாய் தெரியவில்லையே?

ஊகூம்... இவர் என்னிடம் பேசியதை வைத்துக் கொண்டு நான் தெளிவாக எதையும் கணிக்க முடியாது.

போகப் போகத்தானே உண்மை தெரியும்.

இவரது குணத்தைப் பற்றி முழுவதுமாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நெருங்கிப் பார்த்தால்தானே உண்மையான சுயரூபம் வெளிப்படும்?

நான்தான் இந்த வீட்டிற்கு வாழ தொடர்ச்சி 34-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி வந்துவிட்டேனே?

இனி... சுலபமாய் எல்லாமே வெட்ட வெளிச்சமாகி விடும்.

அடிக்கடி தோழி மாலாவுக்கு ஃபோன் செய்து பேச வேண்டும்.

எனக்கு அவளது ஆலோசனை தேவை!

மேற்கொண்டு நான் என்ன செய்ய வேண்டும்? எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவளைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்...'

சற்று முன் நெகிழ்ந்த அவளது மனம்... இரும்பு போல இறுகியது.

நட்பு...! காதலைப் போன்றே நட்பும் புனிதமான ஒன்றுதான்...

நட்பு மிகவும் உன்னதமானதுதான்.

நமது நட்பிற்கும் அன்பிற்கும் தகுதியான நபரைப் பார்த்து நாம் தேர்வு செய்ய வேண்டும்.

'உண்மையான நட்பு' உள்ளதா? என்பதை முதலில் கண்டறிந்து கொள்ள வேண்டும்.

நட்பு என்ற பெயரில்... சிரித்துப் பேசி உள்ளத்தில் வஞ்சத்தை ஒளித்து வைத்திருப்பவருடன் உறவாடினால்.. நமது வாழ்க்கையே பாழாகி விடும்.

யானை தன் தலையில் தானே மண்ணையள்ளிப் போட்டுக் கொள்வது போல்.. நடக்கப் போகும் விபரீதத்தைப் புரிந்து கொள்ளாமல்... மாலாவின் சிநேகிதத்தை வெகுவாய் விரும்பினாள் ராதா.

## 7

நாட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன.

மறு வீட்டுக்கும் உறவினர்களின் வீடுகளுக்கு விருந்துக்குச் செல்வதுமாய் இருந்ததில் இரண்டு மாதங்கள் ஓடி விட்டன.

அஞ்சல் வழியில் கற்பதற்கு வேண்டிய புத்தகங்களை அவளுக்கு கண்ணன் வாங்கிக் கொடுத்திருந்தான்.

சமையலாக இருந்தாலும் சரி... வீட்டு நிர்வாகமாக இருந்தாலும் சரி.

'எதுவாக இருந்தாலும் இனி ராதாவின் பாடு!' என்று ஒதுங்கி இருந்தாள் சொர்ணம்.

கொத்துச் சாவியை இடுப்பில் செருகிக் கொண்டு வீட்டை நிர்வகித்துக் கொண்டு... வளைய வந்தாலும் ராதாவின் மனதில் திருப்தி ஏற்படவில்லை.

மாறாக... உள்ளூர பெரிய மனக்குறை!

தனக்கு கிடைத்த வாழ்வின் அருமையைப் புரிந்து ராதாவின் மனம் தெளிவடையும் தருணத்தில்... கழுகுக்கு மூக்கில் வேர்த்த கதையாக, மிகச் சரியாக ஃபோன் செய்து தெளிந்த மனதைக் கலைத்து விட்டுத்தான் மறுவேலை பார்த்தாள் மாலா.

குட்டையாக மனம் குழம்பித் தவித்துப் போனாள் ராதா.

"ஊகூம்! ராதா நீ எதையும் நம்பவே நம்பாதே... உன் ஹஸ்பண்ட் ரொம்பவே பெருந்தன்மையா நடந்துக்கிடறதா நடிக்கிறாரு...

அப்பத்தானே உன்மனசுல இடம் பிடிக்க முடியும்? எவ்ளோ பெரிய கூட்டுக் குடும்பத்துல போய் நீ மாட்டிக்கிட்டே தெரியுமா?

இத்தன பேருக்கும் நீ வடிச்சுக் கொட்டி பரிமாறி காலத்துக்கும் நீ சமையல்காரியா கிடக்க வேண்டியதுதான்...

உன்னை ஒரு தங்கக் கூண்டுல அடைச்சு வச்சுட்டாங்க ராதா!

சினிமா, டிராமா, கோவில், குளம்னு... நீங்க ரெண்டு பேரும் ஜாலியா எங்கேயாச்சும் போனீங்களா?"

"இ... இல்ல... அவருக்கு சினிமா பார்க்கிறதில இன்ட்ரஸ்ட் இல்ல..." திணறினாள் ராதா.

"சரி! சினிமா பார்க்க இன்ட்ரஸ்ட் இல்லாட்டி என்ன? காஞ்சி காமாட்சி அம்மன் கோவிலுக்காவது உன்னைத் தனியா கூட்டிட்டுப் போயிருக்காரா உன் ஹஸ்பண்ட்?" அதட்டினாள் மாலா.

“இல்ல... ஒவ்வொரு பவுர்ணமி அன்னிக்கும் குடும்பத்தோட சேர்ந்து தான் கோவிலுக்கு போறது வழக்கம்... அதனால நாங்க எல்லோருமா சேர்ந்துதான்..” குரலைத் தழைத்தபடி ஃபோனில் பேசினாள் ராதா.

“பார்த்தியா ராதா? என்ன பொல்லாத வழக்கமாம்? புதுசா கல்யாணமாயிருக்கு. புது பொண்டாட்டிக்கு மனசு ஆயிரமாயிரம் ஆசைகள் இருக்கும்.

தனியா நாலு எடங்களுக்கு ஆசையா அழைச்சுட்டுப் போறாரா உன் புருஷன்?

பொதுவாக எல்லா ஆம்பிளைங்களும் கல்யாணமான புதுசுல புது மனைவி ஆசைப்பட்டதை எல்லாம் வாங்கிக் குடுத்து.. பீச், ஷாப்பிங்குனு பல இடங்களுக்குக் கூட்டிட்டுப் போயி... விழுந்து விழுந்து கவனிப்பாங்க...

உன் வீட்டுக்காரரு என்னடான்னா... பட்டும் படாமலும் நடந்துக்கிறாரே?

இதிலிருந்து ஒண்ணு நல்லாப் புரியுது ராதா!

வேற ஒண்ணுமில்ல... ‘பொறந்த வீட்டுல சதா ராதாவுக்கு கஷ்ட ஜீவனம் தான்.

இங்க நம்ம வீட்டுல விதவிதமா உடுத்திக்கிறதுக்கு குறைவில்லை. மூணு வேளைக்கும் வகை வகையா வக்கணையா சாப்பிடறதுக்கும் குறைவில்லை.

சதா பஞ்சத்துல அடிபட்டுக் கிடந்தவளுக்கு.. இப்போ உடுக்க உண்ண, நிறைவான வாழ்க்கை கிடைச்சிருக்கே? இது போதாதா?’ன்னு உன் கணவர் நெனக்கிறாரு.

அதான்... உன்னைத் தனியா வெளியில அழைச்சுட்டுப் போறதைப் பத்திக் கூட நெனச்சுப் பார்க்க மாட்டேன்கிறாரு...”

இதைக் கேட்டதும் ராதாவுக்கு அவமான உணர்வில் முகம் குன்றிப் போய்விட்டது.

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் கீழுதட்டை அழுந்தக் கடித்துக் கொண்டாள்.

“ராதா! இன்னிக்கு சாயந்தரம் நான் படப்பைக்கு வரப்போறேன்.

அம்மா வீட்டுல ரெண்டு நாள் தங்கியிருக்கலாம்னு ஒரு பிளான்!

நாளைக்கு காலையில் உன் வீட்டுக்கு வர்றேன். உன்னையும் உன் கணவரையும் எங்க வீட்டுக்கு விருந்துக்கு கூப்பிடணும்.

அவருக்கு என்கூட வர்றதுக்கு அவகாசம் இல்லை. அதனால குழந்தையை அழைச்சுக்கிட்டு கார்லே நான் மட்டும்தான் வரப்போறேன்.

என்கூட வர முடியலையேன்னு... அவருக்கு எவ்ளோ வருத்தம். தெரியுமா?

நீ அவசியம் எங்க வீட்டுக்கு வரணும். மகாபலிபுரத்துல வீடு! மாடியில பால்கனியிலிருந்து பார்த்தா...அலையடிக்கிற கடல் ரம்யமா கண்ணைக் கவரும்.

தனி வீடு... தனி ராஜ்ஜியம்! சிட்டுக் குருவிங்க மாதிரி சுதந்திரமா பறந்து திரியற சுகம் இருக்கே?

அதை அனுபவிச்சாத்தான் தெரியும். அவருக்கு நிறைய பிரண்ட்ஸ் இருக்காங்க...

அடிக்கடி கெட் டு கெதர் வச்சுப்போம். அந்த ப்ரண்ட்ஸ் எல்லாரும் தத்தம் மனைவியோட வருவாங்க...

அவங்க எடத்துல நடக்கிற பார்ட்டிக்கு நாங்கபோவோம். வாரம் ஒருநாள் 'கெட் டு கெதர்' தான்!

ஒருநாள் முழுக்க திகட்ட திகட்ட ஜாலியா இருக்கும். நீ எங்க வீட்டுக்கு வர்றப்போ கூட... நாங்க 'கெட்டு கெதர்' ஏற்பாடு பண்ணியிருக்கோம்.



**க**ருடன் பாதி மனித உருவும் பாதி பறவை உருவம் கொண்ட விஷ்ணுவின் ஊர்தி. திருப்பதி மலை அடிவாரத்தில் முதலில் நம்மை இரு கரம் கூப்பி கருடாழ்வார் வரவேற்கிறார்.

**- க.ரவீந்திரன்**

ஓகே ராதா! நாளைக்கு காலையில நேர்லே சந்திச்சுப் பேசலாம்.

உன் கணவர் வேலை விஷயமா வெளியில கிளம்பறதுக்கு முன்னாடியே நான் வந்துடுவேன்.

அவரை இன்வைட் பண்ணணும் இல்லையா? அதான்! வச்சுடட்டுமா? பை!"

ராதாவுக்குள் புதிய கவலை முளை விட்டது.

'கண்ணன் இதற்கு சம்மதிப்பாரா?

இதுவரை நெருங்கிய உறவுக்காரர்களின் வீடுகளுக்கு மட்டுமே விருந்திற்குச் சென்றிருக்கிறோம். அதுவும்கூட மாமியார் சொர்ணத்தின் உத்தரவின் பேரில்தானே?

தோழியின் வீட்டிற்குச் செல்வதற்கு மாமியாரின் சம்மதத்தையும் பெற வேண்டுமே?

சே! என்ன பிழைப்பு இது?'

உள்ளூர வெறுப்பும் எரிச்சலும் முண்டியடித்தன.

## 8

"என்னங்க... என் ஃபிரண்ட் மாலா வந்திருக்கா..." கண்ணாடியைப் பார்த்தபடி தலையை சீவிக் கொண்டிருந்த கண்ணன் திரும்பிப் பார்த்தான்.

"அவ வீட்டுக்கு விருந்துக்கு நம்மை கூப்பிட வந்திருக்கா" ராதாவின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியதை ஊன்றி கவனித்தான்.

"வந்தவங்களுக்கு காபி டிபன் குடுத்து உபசரிச்சியா?"

"உம்... நீங்க குளிச்சுட்டிருக்கும்போதே வந்துட்டா..."

"இதோ வந்துட்டேன் ராதா"

சம்புடத்திலிருந்து விபூதியைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டபடி கூடத்திற்கு வந்தான்.

கூடத்திலிருந்த ஊஞ்சலில் அமர்ந்திருந்த மாலாவின் பாதங்களிலிருந்து ஹை ஹீல்ஸ் செருப்புகளை கவனித்ததும் கண்ணனுக்கு அவள் மீது ஒரு நல்ல அபிப்பராயமே ஏற்படவில்லை.

எரிச்சலை கட்டுப்படுத்தியபடி கரங்களைக் குவித்தான் கண்ணன்.

"வணக்கம்!"

"வணக்கம்... மிஸ்டர் கண்ணன்! நான் உங்க மனைவியோட டியரஸ்ட் ஃபிரண்ட்!

உங்க ரெண்டு பேத்துக்கும் எங்க வீட்டுல விருந்து வைக்கணும்னு பிரியப்படறோம்.

நீங்க அவசியம் ராதாவை அழைச்சுக்கிட்டு... எங்க வீட்டுக்கு வரணும்..."

செல்லமாய் சிணுங்கியபடி பேசினாள் மாலா.

"கண்டிப்பா வரோம்... இந்த வாரத்துல முடியாது. எனக்கு சதா வேலைகள் டைட்டா இருக்கு... அதனால அடுத்த வாரத்துல வர்றதுக்கு முயற்சிக்கிறேன்..."

"அடுத்த வாரத்துல மிஸ் பண்ணாம வரப் பாருங்க. நாங்க உங்க வருகைக்காக ரொம்ப ஆவலா காத்திட்டு இருப்போம்.

அப்புறம் ஒரு ரெக்வஸ்ட்... ராதாவை அட்லீஸ்ட் ரெண்டு மூணு நாளாவது எங்க வீட்டுல வச்சிருந்து சீராட்டி அனுப்பணும்னு நான் விரும்பறேன்.

அவளுக்கு நான் தோழி மட்டுமில்ல.. மூத்த சகோதரியும் கூட...

எங்களுக்குள்ளே அப்படியொரு 'சினேகம்' இருக்கு.

ராதா, எங்க வீட்டுலே ரெண்டு மூணு நாள் தங்கறதிலே உங்களுக்கு ஆட்சேபணை எதுவுமில்லையே?..."தோள்களைக் குலுக்கினாள் மாலா.

அடுத்தவர்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் உடம்பைக் குலுக்கி தளுக்கி ஸ்டைலாகப் பேசும் பெண்களை கண்ணனுக்கு அறவே பிடிக்காது.

"எல்லாமே ராதாவோட இஷ்டம் தான்! எனக்கு ஆட்சேபணை

எதுவும் இல்லை.

எனக்கு நேரமாச்சு. நான் கிளம்பறேன். நீங்க ஃப்ரீயா ராதாகூடப் பேசிட்டிருங்க"

நறுக்குத் தெறித்தாற் போல் பேசிவிட்டு... ராதாவைப் பார்த்து மெல்லத் தலையாட்டி விடைபெற்றுச் சென்று விட்டான் கண்ணன்.

சிறிது நேரத்தில் மாலாவும் கிளம்பி விட்டிருந்தாள்.

அவளை வாசல் வரைக்கும் சென்று வழியனுப்பி விட்டு வந்த ராதா... கூடத்திற்கு வந்தாள்.



கூடத்து சுவரோரமாய் அமர்ந்து... ஏதோவொரு ஆன்மீகப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்த சொர்ணத்தின் முகம் சுட்ட கத்தரிக்காயாக வாடிக் கிடந்தது.

'என்னைப் பார்ப்பதற்கு என் தோழி வந்துவிட்டுச் சென்றாள்.

அவளது வருகை என் மனதிற்கு சந்தோஷத்தையும் நிறைவையும் கொடுத்திருக்கிறதே'

24 வயதான ஹாலிவுட் நடிகை மெகான் பாக்ஸ் 36 வயதான பிரய்ஸ் அஸ்டின் கிரீன் என்ற நடிகரை கடந்த ஜூனில் மணந்து கொண்டார். இவர் திருமணமானவர் என்பதை இவரது ரசிகர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையாம். ஆனாலும் ஐந்து ஆண்டுகள் காதலித்து திருமணம் செய்து கொண்ட கணவரை தான் மிகவும் நேசிப்பதாக நடிகை சொல்கிறார்.

**- க.ரவீந்திரன்**

அத்தை ஏன் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ள வேண்டும்?

நான் சந்தோஷமாக இருப்பது... இவருக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை போலும்!

கண்ணனுக்கும் இங்கிதம் தெரியவில்லை.

மாலாவிடம் நின்று நிதானித்து சகஜமாக கலகலப்பாக சிரித்துப் பேசக் கூடாதா?

மாலாவின் கணவர் சுதாகர் நாசூக்காய், நாகரீகமாய், சகஜமாய் கலகலப்பாகப் பேசிப் பழக்க கூடியவராமே? கண்ணனும் படித்தவர் தானே?

சுதாகர் மாதிரி நாகரீகமாய் நடந்து கொண்டால்... குறைந்தா போய் விடுவார்?

நானும் மாலாவைப் போல் சுதந்திரமாக ஜாலியாக வாழ வேண்டும்.

இவரை மாற்ற வேண்டும்.

இவர், சுதாகரைப் போல் மாற வேண்டும்.

இவர் மாறுவாரா?

மாற்றுவதற்கு நான் முயற்சிக்க வேண்டும்.

என் முயற்சி வெற்றியடையுமா?

பார்க்கலாம். எறும்பு ஊற ஊறக் கல்லும் தேயும்' என்று கொள்வார்களே?'

தீர்மானித்து முடித்த தருணத்தில்.. மிகச் சரியாக டெலிஃபோன் ஒலித்தது.

ரிசீவரை காதிற்கு கொடுத்து 'ஹலோ' என்றாள் ராதா மறுமுனையில் அம்மாதான் பேசினாள்.

"ராதா! வேலையெல்லாம் ஆயிடுச்சா? அடுத்த வாரம் உங்கப்பாவுக்கு 'திதி'. ஞாபகமிருக்கு இல்லையா?

வீட்டுல படையல் வைக்கணும். புத்தாண்டு வேற நெருங்கிட்டு இருக்கே? உனக்கும் மாப்பிள்ளைக்கும் புதுத்துணி எடுக்கணும்.

மாப்பிள்ளை இப்பத்தான் வீட்டுக்கு வந்து கை நிறைய பணம் குடுத்துட்டுப் போனாரு...

படையல் அன்னிக்கு மாப்பிள்ளை வீட்டுக்காரங்க அத்தனைபேருக்கும் நம்ம வீட்டுலதான் சாப்பாடு...

உனக்கு எப்போ தோதுப்படும்னு சொல்லு... நீயும் நானும் காஞ்சிபுரத்துக்குப் போயிட்டு வந்துடலாம்.

மாப்பிள்ளை நம்மை பஸ்ஸுல ஏறி சிரமப்படாதீங்க... டாக்ஸி அமர்த்திக்கிட்டு 'போயிட்டு வாங்க'ன்னு சொல்லியிருக்காரு.

நான் உன்கிட்ட ஒண்ணு கேட்கணும்னு நெனச்சேன். மாப்பிள்ளை முகத்துல கலகலப்பையே காணோமே?

ஏன் ஒரு மாதிரி டல்லாவே இருக்காரு? வழக்கமா புது மாப்பிள்ளை முகத்துல தெரியற புத்துணர்ச்சி அவரு முகத்துல காணோமே?

என்ன சமாச்சாரம்? அவரு மனசு கோணாம நீ நடந்துக்கிடறே தானே? உங்களுக்கு உள்ளே ஏதாச்சும் பிரச்சினையா?

எதுக்காக இப்படி இருக்காரு?"

துருவித் துருவி கேள்வி கேட்டாள் சிவகாமி.

"பிரச்சினை எதுவுமில்லையே அம்மா! அ... அவருக்கு வேலைங்க ஜாஸ்தி இருக்கிறதால.. ஒரு வித டென்ஷன் முகத்துல தெரியுதுன்னு நெனக்கிறேன்" மென்று விழுங்கினாள் ராதா.

"ஊகூம்! நீ சொல்ற பதில்.. எனக்கு சரியாப் படலை. எப்பவும் மாப்பிள்ளைக்கு இருக்கிற வேலைகள்தானே?

நீ படிச்ச பொண்ணு. நான் எதுவும் உனக்கு விளக்கமா சொல்லத் தேவையில்லைன்னு நெனக்கிறேன்.

விலை மதிக்க முடியாத பொக்கிஷம், உனக்கு கிடைச்சிருக்கு ராதா!

அதோட அருமையைப் புரிஞ்சு உணர்ந்து நடந்துக்க வேண்டியது உன் பொறுப்பு ராதா!

அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்.

கண்ணன் முகத்துல பழைய கலகலப்பையும் புத்துணர்ச்சியையும்

மறுபடியும் கொண்டு வர்றது... உன் கையிலதானிருக்கு.

பொறுப்பான பொண்ணு நீ! நான் சொல்றது புரியுது இல்ல?" சற்றே கடுமையான குரலில் அதட்டினாள் சிவகாமி.

"பு... புரியுது அம்மா! வேலையெல்லாம் முடிஞ்சிருச்சு... நா இப்ப ஃப்ரீயாத் தான் இருக்கேன். இப்பவே வேணும்னாலும் காஞ்சிபுரத்துக்குப் போகலாம்..."

"வீட்டுலே அத்தைகிட்டே சொல்லிடு! மாப்பிள்ளைக்கு ஃபோன் போட்டு அவருகிட்டே அனுமதி வாங்கிட்டு... நம்ம வீட்டுக்கு கிளம்பி வா!

நான் தயாரா இருக்கேன். சரியா?"

"சரிம்மா" ரிசீவரை மெல்ல வைத்தாள் ராதா.

சற்று முன் கணவனிடம் இரவில் தனது ஆசையைப் பற்றிப் பேச வேண்டும் என்று துணிவைத் திரட்டியிருந்தாள்.

அம்மா போட்ட அதட்டலில்... அந்த துணிவு வந்த சுவடு தெரியாமல் ஓடி மறைந்து விட்டிருந்தது.

## 9

"நைட் ரொம்ப லேட்டா வர்றீங்க... நேரங்கழிச்சு பசியடங்கிப் போய் சாப்பிடறதாலே.. வரவர நீங்க ரெண்டு சப்பாத்திக்கு மேல சாப்பிடறதில்ல...

அதுக்கு மேல உடனே தூங்காம... ஃபைலை வேற புரட்டுக்கிட்டு ரொம்ப நேரம் கண்முழிச்சுட்டிருக்கீங்களே அத்தான்?

உடம்பு என்னத்துக்கு ஆகும்? இந்தாங்க.. மறுக்காம இந்த ப் பாலை குடிச்சிடுங்க"

கட்டிலில் அமர்ந்து ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்த கண்ணன், கரிசனமாய் பேசிய மனைவியை ஊன்றிப் பார்த்தான்.

அவள் நீட்டிய பால் டம்ளரை வாங்கி, பாலைப் பருகிவிட்டு காலியான டம்ளரை அவளிடம் கொடுத்தான்.

"பிஸினஸ் நல்லா டெவலப் ஆகிட்டே இருக்குன்னு... உனக்கே தெரியுமே ராதா?"

வெறித்தனமா நாம உழைச்சாத்தானே... இன்னும் நிறைய சாதிக்க முடியும்? பக்கத்துல காஞ்சிபுரத்துல மெயின் ஏரியாவுல பெரிய டிபார்ட்மெண்டல் ஸ்டோர் ஒண்ணு ஆரம்பிக்கணும்னு பிளான் பண்ணியிருக்கேன்.

கண்டிப்பா அது ரொம்ப நல்லா போகும். கொஞ்ச நாள் கழிச்சு அதுக்குப் பக்கத்திலேயே 'ராதா வெஜ் நேச்சுரல்ஸ்'னு பெரிய காய்கறிக்கடையையும் தொடங்கணும்னு ஒரு திட்டம்!

இன்னும் கொஞ்சம் டயம் ஒதுக்கி கடுமையா உழைச்சா..."

கண்ணன் பேசி முடிக்கும் முன் அவசரமாய் இடைமறித்தாள் ராதா.

"இப்பவே நீங்க இடைவிடாம... ஓய்வே எடுக்காம கடுமையாத்தானே உழைச்சுட்டு இருக்கீங்க?

சாதிக்கணும்கிற வைராக்கியத்தை கண்டிப்பா பாராட்டியே ஆகணும். ஆனா... உங்க உடம்பையும் கொஞ்சம் பார்த்துக்கணும். இல்லையா?

சுவரை வைத்துத்தானே சித்திரம் வரைய முடியும்?

நீங்க சரியா சாப்பிடறதில்லை... நல்லா தூங்கி ஓய்வே எடுக்கற தில்லைன்னு நானே கவலைப்பட்டுக்கிட்டு இருக்கேன்.

எங்கம்மா கூட நீங்க முன்ன மாதிரி இல்லையேன்னு சொல்லி வருத்தப்பட்டாங்க...

என் வாழ்க்கையே நீங்கதானே? உங்களுக்கு ஏதாச்சும் ஒண்ணுன்னா.. எ... என்னால தாங்க முடியாதுங்க...

அந்த நிமிஷமே நா உயிரை விட்டுருவேன்..." தழுதழுத்தபடி பேசியவளை... ஆச்சரியத்துடன் ஏறிட்டான் கண்ணன்.

"கல்யாணத்திலிருந்து இவள் எதையோ பறிகொடுத்தாற் போல் முகம் வாடி இருந்தாள்.

என்ன காரணம் என்று மனம் விட்டு எதையும் சொல்லவில்லை.

பம்பரமாய் சுழன்று அனைவருக்குப் பணிவிடை செய்கிறாள்.

அனைவரிடம் நல்ல பெயர் சம்பாதித்து... அவர்களது மனதில் இடம் பிடித்தும் விட்டாள்.

'சிரித்த முகத்துடன் வளைய வருபவள்... தோழியிடமிருந்து ஃபோன் வந்தவுடனே சோகமாகி விடுகிறாள். முகமே இருண்டு விடுகிறது கண்ணா!' என்று என்னிடம் அடிக்கடி அம்மா கூறுகிறாள்.

அன்று இவளது தோழி மாலா நேரில் வந்து விருந்துக்கு அழைப்பு விடுத்த போதே... எனக்கு முக்கால்வாசி புரிந்துவிட்டது.

ராதாவின் வினோதமான போக்குக்கு அந்த மாலாதான் காரணம்.

'ராதாவுக்கு என்னைப் பிடிக்காமல் போய்விட்டதோ?' என்று உள்ளூர சிறு சந்தேகம் இருந்தது.

அது எவ்வளவு பெரிய தவறு!

இவள் என்னை மனப்பூர்வமாக நேசிக்கிறாள்.

'அந்த நிமிஷமே நா உயிரை விட்டுருவேன்' என்கிறாளே? அந்த அளவுக்கு என் மீது உயிரை வைத்திருக்கிறாள் என்று விளங்கிவிட்டது.

ஆத்மார்த்தமாக என்னுடன் ஒன்றி வாழ... இவளுக்கு என்ன தடை?

மனதில் ஏதோ நெருடல் இருக்கிறது.

இவளது மனதை மாலா நன்கு குழப்பி விடுகிறாள். இதை எப்படி இவளுக்கு புரிய வைப்பது? இவளது தோழியைப் பற்றி எடுத்துச் சொன்னால்... இவள் நம்பாமல் கூட போகலாம். தோழியை தரக்குறைவாக எடைபோட்டு விட்டாரே? என்று என் மீது வருத்தப்படலாம்.

எதையுமே அவளாக உணர்ந்து கொள்ளட்டும். அதுதான் நல்லது.

அவளாக உணர்ந்து புரிந்து கொண்டால்... தன்னால் வழிக்கு வந்து விடுவாள். அதுவரை அமைதி காக்க வேண்டியதுதான்..."

தனக்குள் எண்ணமிட்டபடி அவளை மீண்டும் ஏறிட்டான்.

"சரி! உன் வருத்தம் புரியுது ராதா! இனிமே கொஞ்சம் சீக்கிரமா வரப் பார்க்கிறேன். என் மேல உனக்கு இவ்ளோ அக்கறையும் பிரியமும்

**தெய்வக்கவி சேக்கிழார் அருளிய பெரிய புராணம் புதுக்கவிதை வடிவில்**
பா.சத்தியமோகன்
லாவண்யா வெளியீடு 1, கவிஞர் இல்லம், ரைஸ்மில் ரோடு, சேஷசாயி நகர்(விரிவு)
வடலூர்-3.



**பு**துக்கவிதை வடிவங்கள் பல்கிப் பெருகி, ஏராளமான இளம் படைப்பாளிகளை உருவாக்கி, இலக்கிய உலகில் ஓர் யுகப் புரட்சி நிகழ்ந்து கொண்டிருந்த நாட்களில், 'இதெல்லாம் நிற்காது. இலக்கணக் கட்டுக்குள் அமையாதவற்றைக் கவிதை எனல் தகாது. இவை வெறும் சொற்சிதறல், உரைவீச்சு என என்னென்னவோ சொல்லப்பட்டன. கடும் விமரிசனங்கள் எழுந்து அனல் பரப்பின. ஆனால், இளம் படைப்பாளிகளின் உத்வேகத்தால், 'புதுக்கவிதை மரபு' காலவெள்ளத்தில் அடித்துச் செல்லப்படாமல், கரையேறி ஒளிர்ந்தன. கிட்டத்தட்ட இன்று அரை நூற்றாண்டுப் பின்னணி வரலாறு புதுக்கவிதைகளுக்கு உண்டு எனலாம். இன்னும் கொஞ்சம் நீட்சி செய்து, இதை மகாகவி

---

இருக்கிறதை நெனச்சா ரொம்ப சந்தோஷமா இருக்கு."

"என்ன இப்படி சொல்லிட்டீங்க அத்தான்? ஒரு பொண்ணுக்குகட்டின கணவர் மேல் அக்கறையும், பிரியமும் இல்லாம போயிடுமா?"

"அது சரிதான்... ஆங்... உன்கிட்ட ஒரு விஷயத்தை சொல்லணும்னு நெனச்சேன். வேலை மும்முரத்துல மறந்து மறந்து போயிடுது.

உன் ஃபிரண்ட் மாலா நம்மை இன்வைட் பண்ணினாங்க இல்லையா?"

"ஆமா... அடுத்த வாரம் வரப் பார்க்கிறோம்'னு நீங்க சொல்லியிருந்தீங்க... அவ இங்க வந்துட்டுப் போயி... பத்து நாளைக்கு மேலேயே ஆயிடுச்சு... தினமும் ஃபோன்லே எப்போ வர்றீங்கன்னு கேட்டு தொந்தரவு பண்ணிட்டுத்தான் இருக்கா..."

"சாரி ராதா! என்னால உன்கூட வரமுடியாது. இங்க என்ன நிலவரம்னு உனக்கே நல்லாத் தெரியுமே?

பாரதியிலிருந்தே பார்ப்பவர்களும் உண்டு. எனினும் ந.பிச்சமூர்த்தி தொடங்கி, மீரா, நா.காமராசன், மு.மேத்தா, அப்துல் ரகுமான், சிற்பி பாலசுப்பிரமணியம், புவியரசு என ஒரு நெடிய மரபு நிச்சயம் உண்டு என்பதே நிதரிசனம்.

புதுக்கவிதை மரபை சிருஷ்டித்த பலரும் பெரும் கல்வியாளர்கள், இலக்கணம் அறிந்தவர்கள். தமிழ் வளர்ச்சியில் ஒரு புதுவெளிச்சம் பரவவேண்டும், புதிய தளம் பலப்பட வேண்டுமென்றே இதனை மேம்படுத்தினர். புதுக்கவிதை வெறும் உதிரிகள். அதில் காவியங்கள் இயற்ற முடியாது என்ற போது, கவிஞர் வாலி போன்றவர்கள் பழம்பெரும் இதிகாச, புராணங்களைப் புதுக்கவிதையில் யாத்தளித்து, சாதனை நிகழ்த்திக் காட்ட நேர்ந்தது. அதனை அடியொற்றி, இளங்கவிஞர் பா.சத்தியமோகன், பெரிய புராணத்தை புதுக்கவிதையில் எழுதி, இரு பாகங்களாக– 1664 பக்க அளவில் வெளியிட்டிருக்கிறார். விலை ரூ.600. உரை எதுவும் தேவையில்லாத வகையில், எளிய வரிகளில் எல்லோருக்கும் புரியும்படி சிவனடியார்களின் திவ்ய சரிதம் தேனாய் இனிக்கும் தமிழ்நடையில் அமைந்துள்ளது. கவிப்பேரரசு வைரமுத்துவால் விருது அளித்துப் பாராட்டப்பட்டவர் பா.சத்தியமோகன் என்பதும், நெய்வேலியில் பொறியாளராக இருக்கும் இவர் எழுதிய நாவல்கள் முன்பே நம் குங்குமச் சிமிழில் இடம்பெற்றதுண்டு என்பதும் குறிப்பிடத்தக்கவை.

– கௌதமநீலாம்பரன்

---

*உன் ஃபிரண்ட்கிட்டே என்னோட இக்கட்டான சூழ்நிலையைப் பத்தி சொல்லிடு... நீ மட்டும் போயிட்டு வா!"*

*டாக்ஸி அமர்த்திக்கிட்டுப் போ... அங்கே ரெண்டு மூணுநாள் தங்கிட்டு வரப் பிரியப்பட்டாலும்... எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்ல... உன் தோழியோட குழந்தைக்கு புது டிரஸ் வாங்கிக்கோ.. வேண்டிய அளவுக்கு பணத்தை எடுத்து வச்சுக்கோ... கையில செல்ஃபோனை எடுத்துக்கோ... பத்திரமா போயிட்டு பத்திரமா திரும்ப வா! சரியா?"*

*"நா... நா மட்டும் தனியா போனா நல்லாயிருக்காதே அத்தான்..." தயங்கி இழுத்தாள் ராதா.*

*"இப்படி நீ தயங்கிட்டு இருந்தா... வருஷக் கணக்கு ஆனாலும் விருந்துக்குப் போகவே முடியாது. உன் தோழி வேற தினமும் ஃபோன் பண்ணி உயிரை வாங்கறாங்க... இல்லையா?*

*அவங்க தப்பா நெனைப்பாங்க தானே? இதுக்கு நீ மட்டும் கிளம்பிப் போயிட்டு வந்துடறது பெட்டர் இல்லையா?"*

"நா... நா எப்போ கிளம்பட்டும்?"

"நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை தானே? தங்கச்சி சுகந்தி வீட்டுல தானே இருப்பா... நாங்க பார்த்துக்கிறோம். நீ தாராளமா நாளைக்கே கிளம்பிப் போயிட்டு வா! மாலாகிட்டே ஃபோன் பண்ணி சொல்லிடு. அவங்க வீட்டு முகவரி உன்கிட்டே இருக்குல்லே?"

"ஓ... இருக்கு. அதோ அந்த டெலிபோனுக்கு பக்கத்துல இருக்கிற சின்ன டைரியில முகவரியை குறிச்சு வச்சிருக்கேன்..."

தோழியின் வீட்டிற்குச் செல்லப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில்.. ராதாவின் முகத்தில் விளக்கு போட்டாற் போல் வெளிச்சம்!

தோழியின் வீட்டில் தனக்கு மிகப் பெரிய ஆபத்து காத்திருப்பதை... ராதா எவ்விதம் அறிவாள்?

## 10

"வெல்கம் மிஸஸ் ராதா! ரொம்ப நாளா மாலா ஏங்கிட்டிருந்தா... 'என் ஃபிரண்ட் ராதா நம்ம வீட்டுக்கு வரணும்.

அவ கூடவே நான் டைம் ஸ்பெண்ட் பண்ணணும்னு சொல்லிட்டிருந்தா....

இன்னிக்கு நீங்க வந்துட்டீங்கல்ல?

இனிமே அவளைக் கையிலே பிடிக்க முடியாது.

சந்தோஷத்துல அவ இறக்கை கட்டிப் பறக்காத குறைதான்..."

"மாலாவோட சந்தோஷம் தான் என் சந்தோஷமும்... ஐமீன்.. இரட்டிப்பு மகிழ்ச்சின்னு சொல்ல வந்தேன்.

மனைவியை சந்தோஷமா வைச்சுக்க வேண்டியது ஒரு கணவனோட கடமையாச்சே?

நான் எப்பவும் இந்தக் கடமையிலேர்ந்து தவறுவது கிடையாது.

மனைவியோட எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யறதிலேதான்.. ஒவ்வொரு கணவனும் குறியா இருக்கணும்கிறது என் கருத்து.

உங்களைப் பத்தி மாலா நிறையவே சொல்லியிருக்கா...

அவகூட நீங்க எடுத்துக்கிட்ட ஃபோட்டோவை.. என்கிட்ட மாலா காட்டியிருக்கா...

ஃபோட்டோவை விட நேர்லே நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க ராதா!

'என் ஃபிரண்ட் ஒரு அழகுப் பெட்டகம்'னு ராதா அடிக்கடி சொல்லுவா.

அது சரிதான்... அழகுப் பெட்டகம்'னு சொல்றதை விட... 'பேரழகுப் பெட்டகம்'னு சொல்லலாம்.

என்ன மாலா... நான் சொல்றது சரிதானே?" மனைவியைப் பார்த்து சுதாகர் முறுவலித்தபடியே கேட்டான்.

"எக்ஸாட்லி சுதாகர்! சரியா சொன்னீங்க..." கணவனின் தோளில் மாலா உரிமையா தட்டியதும்.. இருவரும் சொல்லி வைத்தாற்போல் கலகலவென்று சிரித்தனர்.

என்னதான் தோழியின் கணவனாய் இருந்தாலும்... வெளிப்படையாய் சுதாகர் பாராட்டியதும்... அப்படியே கூசிப்போய் விட்டாள் ராதா.



**பொம்**மையின் முதுகில் ஒரு தபால்தலை அளவிற்கு உள்ள திரையில் 30 நிமிடம் ஓடக்கூடிய படங்களைப் பார்க்கும் வகையில் உருவாக்கப்பட்ட புதிய பார்பி பொம்மைகள் விற்பனைக்கு கிடைக்கின்றன. பாட்டரியால் இயங்கும் இதன் விலை 550 டாலர்கள்.

- க.ரவீந்திரன்

இதுவரை எந்த அந்நிய மனிதனும் பகிரங்கமாய் அவளது அழகைப் பாராட்டிப் பேசியதில்லை.

தணலின் மேல் நின்று கொண்டிருப்பதைப் போன்று தர்மசங்கடமாய் இருந்தது.

தனது கணவன் கண்ணன் நறுக்குத் தெறித்தாற் போல் பேசுவதை.. மனதளவில் அவள் நினைத்துப் பார்த்தாள்.



சட்டென்று பார்வையைத் தழைத்தபடி அவள் தனது முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

"மாலா! உன் சிநேகிதிக்கு கெஸ்ட் ரூமைக் காட்டு இன்னிக்கு கெட் – டு– கெதர் இருக்கில்லையா?

அதற்கான அரேஞ்ச்மெண்ட்ஸ் எல்லாத்தையும் பண்ணணும்.

மதியம் எனக்காக காத்திருக்க வேணாம். நீங்க லஞ்சை முடிச்சிருங்க..

நான் நாலு மணிக்கெல்லாம் வந்துருவேன். மத்தவங்க எல்லாரும் அஞ்சு மணிக்குள்ளே இங்க அசெம்பிள் ஆயிடுவாங்க... சரியா? டார்லிங்?"

"ஓகே சுதாகர்! நான் பார்த்துக்கிறேன்.

'**அ**வதார்' படத்தில் நடித்த சோயி சல்டானா தன்னுடைய தாயை மிகவும் மதிக்கிறார். இவரது முன்னேற்றத்திற்காக இவரது தாயார் பல தியாகங்களைச் செய்துள்ளாராம்.

– க.ரவீந்திரன்

நீங்க போயிட்டு வாங்க"

"பை மிஸஸ் ராதா! இது உங்க வீடு மாதிரி சங்கோஜப்படாதீங்க... ஃப்ரீயா ஃபீல் பண்ணுங்க...

உங்க ஃபிரண்ட் ஜாலியா கலாய்ச்சுட்டு இருங்க... ஈவ்னிங் விருந்துக்கு நான் வந்து ஜாயின் பண்ணிக்கிறேன்"

போட்டிகோவிலிருந்து கார் வெயில் கிளம்பிச் சென்றதும் மாலா, ராதாவின் அருகே வந்தாள்.

"வா ராதா! மேலதான் கெஸ்ட் ரூம் இருக்கு. பால்கனியில இருந்து பார்த்தா... கடல் அழகா தெரியும்" என்றாள்.

உண்மைதான்! அலையடிக்கும் நீலக்கடல்!

வெள்ளி நிறப் பாய்களை அடிக்கடி விரிப்பதும், சுருட்டுவதுமாய் ஓயாமல் கரையை வருடிச் சென்ற அலைகளை காண கண் கோடி வேண்டும்தான்!

ராதாவின் தளரப் பின்னியிருந்த கூந்தலைக் கலைத்து. செல்லமாய் விளையாடியது கடற்காற்று!

மாலா வற்புறுத்தியதால் சாப்பிட்டு விட்டு மீண்டும் பால்கனியில் வந்து நின்று... கடலையே வெறித்துக் கொண்டிருந்தனர்.

"நீ படுத்து ரெஸ்ட் எடேன் ராதா! இன்னிக்கு விருந்துக்கு எல்லாரும் வர்றதால... எனக்கு கொஞ்சம் வேலைகள் இருக்கு. சரியா?" என்றபடி கீழே சென்றுவிட்டிருந்தாள் மாலா.

'எவ்ளோ அழகான ரம்யமான வீடு! தனிக்குடித்தனம்! மாலா உண்மையில் மிகவும் கொடுத்து வைத்தவள்.

கடவுள் அவளுக்கு மிக நிறைவான வாழ்க்கையை அளித் திருக்கிறார்.

அவளுக்கு, எந்தவிதமான பிக்கலும் பிடுங்கலும் இல்லை...'

மனம் பாறாங்கல்லாய் கனக்கத் தொடங்கியது.

தலை இலேசாய் வலிப்பது போலிருந்து.

அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்காமல்.. தனக்கு ஒதுக்கப்பட்ட

அறைக்குச் சென்று... கட்டிலில் படுத்தாள்.

சிறிது நேரத்திலேயே அடித்துப் போட்டாற் போன்று நன்றாக உறங்கிப் போனாள்.

ஆழ்ந்த உறக்கத்தில் தனது வலது காலை யாரோ பிறாண்டுவது போலிருக்கவே... வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் ராதா.

எதிரே வேலைக்காரி பக்கெட்டும் கையுமாய் நின்று கொண்டிருந்தாள்.

"ஓ... வீட்டைத் துடைக்கணுமா?" மெல்ல முறுவலித்தாள். கீழே இருந்த தனது பேக்கை எடுத்து கட்டிலின் மீது வைத்தாள்.

"பார்த்தா நல்ல குடும்பத்துப் பொண்ணு மாதிரி தெரியுதே தாயீ... இங்க யாரும் நல்லவங்க இல்ல...

இந்த வீட்டு ஐயா நல்லா சம்பாதிக்கிறாருன்னு உனக்குத் தெரியும்... ஆனா அவரு சட்டத்துக்கு விரோதமா தொழில் பண்ணி காசு சம்பாதிக்கிறவரு தாயீ...

மாலா உன் தோழியா? வெட்கக்கேடு! வெளியில சொல்லாதே... கொஞ்ச நேரத்துல ஒரு கும்பல் வரும். பாட்டு டான்ஸ்னு வீடே அமளி துமளிப்படும்.

இந்த வீட்டு ஐயா வேறொருத்தர் மனைவியைக் கட்டிப் பிடிச்சு ஆடுவாரு... மாலா வேற ஆளு கூட ஆட்டம் போடும்.

வயித்துப் பாட்டுக்கு இந்த வீட்டுல வேல செய்றேன். இங்க நடக்கிற கண்றாவி உனக்குத் தெரியாதும்மா...

இங்க ஏன் வந்தே தாயீ? இவங்க எதுக்கும் துணிஞ்சவளாச்சே? போயிடு தாயீ... சேதாரமில்லாம போயிடு!

பெத்த பொண்ணா நெனச்சு உன்கிட்ட நான் உண்மையைச் சொல்லிட்டேன்.

என்னைக் காட்டிக் கொடுத்துடாதே தாயீ!..." குழைந்த குரலில் பேசி விட்டு சுற்றும் முற்றும் பார்த்தபடியே அவள் வெளியேறி விட்டாள்.

"ஐயோ இது என்ன பயங்கரம்? மாலா இவ்வளவு மோசமானவளா?'

மணிஐந்தாகி விட்டதே... கீழே அனைவரும் வந்துவிட்டார்கள் போலிருக்கிறதே? வீடே அமளி துமளிப்டுகிறதே?

இன்றிரவு இங்கே தங்கக்கூடாது.

எப்படியாவது இங்கிருந்து சீக்கிரமாகப் போக வேண்டும். திகிலில் பேக்கை துழாவி செல்ஃபோனைத் தேடினாள்.

செல்ஃபோன் காணவில்லையே?

யார் எடுத்திருப்பார்கள்?

எப்படியாவது கண்ணனுக்கு போன் செய்ய வேண்டுமே?' பயத்திலும் கலவரத்திலும் அவளுக்கு உதறல் எடுத்தது.

"ஹாய் ராதா! கீழே எல்லாரும் வந்தாச்சு. மாலா தேவதை மாதிரி பளிச்சுனு டிரஸ் பண்ணிக்கிட்டிருக்கா...

நீங்க ரெடியாகலை? கீழே வந்து பாருங்க... சொர்க்கம் இப்படித்தான்னு இருக்கும்னு நெனப்பீங்க..

மாலாவுக்கு பரந்த மனப்பான்மை... நீங்க படிச்சவங்க... நீங்களும் அப்படித்தான் நெனைக்கிறேன்.

வெளிப்படையாகவே விஷயத்துக்கு வர்றேன். நீ இன்னமும் உன் கணவர்கூட 'தாமரை இலை தண்ணி' மாதிரிதான் வாழறேன்'னு எனக்குத் தெரியும்.

உனக்கு சந்தோஷத்தை நான் தர்றேன் டார்லிங்...! மாலா எதையும் 'கண்டுக்க' மாட்டா... கவலைப்படாதே...

ஏன்னா... நான் எதையும் ஜீன் அவளை 'கண்டுக்கிடறதே' இல்ல.. எங்களுக்கு உள்ளே அப்படியொரு 'அண்டர்ஸடாண்டிங்'

ஐ லைக் யூ வெரி மச் ராதா!" குடித்திருந்ததால் சுதாகர் சற்றே தள்ளாடியபடிதான் பேசினான்.

"சீ! என்னை என்ன மாலா மாதிரி பொண்ணுன்னு நெனச்சியா? உன்னைப் போய் உயர்வா நெனச்சுட்டிருந்தேன் பாரு... ராஸ்கல்" அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டு கீழே இறங்கி வந்தாள்.

'ஆணும் பெண்ணும் மதுக்கோப்பையைக் கையிலேந்தியபடி கும்மாள மிடுகிறார்களே? கடவுளே! இவர்களிடமிருந்து நான் எப்படி




தப்புவது?"

"ஏய் ராதா! நில்லு எங்க ஓடறே?" இடைமறித்த மாலாவை வெறி கொண்டவளைப் போல் பிடித்து தள்ளிவிட்டு வாசலை நோக்கி மான் போல் ஓடியவள்... யார் மீதோ மோதிக் கொண்டு வீலென்று அலறினாள்.

கண்ணன்!

"க... கண்ணன் அத்தான்! நா... நான்... உங்களைப் போய்..." மேற்கொண்டு பேசமுடியாமல் கோவென்று கதறியபடி அவனது மார்பில் சாய்ந்தாள்.

"வா.. வந்து கார்லே ஏறு! சாரி ராதா! உன்னை அனுப்பி வச்சுட்டு... என் உயிர் என்கிட்டேயே இல்ல தெரியுமா?

மனசு 'திக் திக்'னு அடிச்சது... ஃபோன் பண்ணினா... உன் செல் ஸ்விட்ச் ஆஃப்னு வந்தது.. அடிச்சுப் புரண்டு கிளம்பி வந்துட்டேன். ஐ லவ் யூ ஸோ மச் டா!

நீ இல்லாம என்னால ஒருநாள்கூட இருக்க முடியாது ராதா"

ஆஜானுபாகுவாய் சிங்கம் போல் கண்ணன் வந்து நிற்பான் என்று மாலா எதிர்பார்க்கவில்லை. வெல வெலத்துப் போனாள்.

கணவரின் அணைப்பில் நடந்து காரிலேறிய ராதா, "சாரி அத்தான்! என்னை மன்னிச்சுடுங்க...

மாலா கண்டதையும் சொல்லி என் மனசைக் கலைச்சு வச்சிருந்தா...

அவளுக்கு இடம் குடுத்தது என் தப்புதான்! என்னைப் போன்ற பெண்களுக்கு இது பாடம் அத்தான்!

அந்தரங்க விஷயங்களை 'தோழி'ன்னு நம்பி சொல்லிடக்கூடாது.

இருக்கிறதை விட்டுட்டு பறக்கிறதுக்கு ஆசைப்படக்கூடாது. அப்படி ஆசைப்பட்டா ஆபத்துதான்!

வெளிப் பார்வைக்கு பளிச்சுனு தெரியற ஜிகினா பளபளப்பை... நம்பி ஏமாறக்கூடாது.

டீஸண்ட், நாகரீகம்னு சொல்லிக்கிட்டு... பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் காத்துல பறக்க விடற கும்பல்கிட்டே சகவாசகமே வச்சுக்கக்கூடாதுன்னு.. நான் நல்லா புரிஞ்சுகிட்டேன்.

ஒரு படிக்காத வேலைக்காரம்மா... எனக்கு எல்லாத்தையும் சொல்லிப் புரிய வச்சாங்க...

கட்டின மனைவியா இருந்தாக்கூட... எவ்ளோ கண்ணியமா நாகரீகமா நடந்துக்கிட்டீங்க...

உங்க அருமை புரியாம நான் நடந்துகிட்டேனே? உங்களை ஏறிட்டு பார்க்கவே எனக்கு மனசாட்சி உறுத்துதே...

சத்தியமா சொல்றேன் அத்தான்! உங்க மனைவிங்கிற ஸ்தானம் கிடைச்சிருந்தும்.. கண்ணிருந்தும் குருடியா... கண்டவளோட பேச்சைக் கேட்டு... சே!

ஐ லவ் யூ அத்தான்! உங்க மனைவியா உண்மையா ஆத்மார்த்தமா உங்ககூட சேர்ந்து வாழக்கூடிய பாக்கியத்தை எனக்கு நீங்க குடுப்பீங்களா?

எ... என்னை மன்னிப்பீங்களா?" கணவனின் வலது கரத்தைப் பற்றிக் கண்களில் ஒற்றிக்கொண்டே தேம்பியவளை இழுத்து இதமாக அணைத்துக் கொண்டான் கண்ணன்.

"உள்ளம் ரெண்டும் ஒண்ணாயிடுச்சே? நமக்கு இடையே 'மன்னிப்பு'ங்கிற பெரிய வார்த்தை எதுக்கு?" கேட்டபடி அவளது நெற்றியில் மென்மையாக இதழ் பதித்தான் கண்ணன்.

**சுபம்**